www.padippakam.com

திவாலாகும் இந்தியப் பொருளாதாரம்

15 மார்ச் '95 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# திட்டக்குடி சாதிக் கலவரம்: "தலித் சிறுத்தைகள்" படிப்பினை பெறவேண்டும்

திட்டக்குடி - நாவலூர், ஆவட்டி கிராமங்களில் 17.1.95 அன்று "தலித் சிறுத்தைகள்" அமைப்பினர் தமது கொடியை ஏற்ற முயன்றனர். தாழ்த்தப்பட்டவர்களை வன்னிய மேல் சாதியினர் கொடி ஏற்ற விடாமல் தாக்கி தடுத்தனர். இதைக் கேள்விபட்ட அருகிலுள்ள ஏனைய கிராமத்து சிறுத்தைகள் மேல் சாதி வெறியர்கள் மீது எதிர் தாக்குதல் தொடுத்தனர். இதில் மேல் சாதியினரின் வீடுகள் அனைத்தும் தாக்கப்பட்டன.

அண்மையில் அங்கு செட்டி பாளையத்தில் தலித்துகளின் வீடுகள் மேல்சாதி வெறியர்களால் எரியூட்டப்பட்டபோது பதறாத போலீசு, நாவலூர் - ஆவட்டி கிராமங்களில் மேல் சாதியினர் தாக்கப்பட்டதும் பதறியடித்துக் கொண்டு வந்து உதவி செய்தது. பல ஆண்டுகளாக இச்சுற்று வட்டாரப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகப் பல கொடுமைகள் நிகழ்ந்தும் பிழைப்புவாத, துரோக, பெயர்பலகை கொண்ட பல தாழ்த்தப்பட்ட அமைப்புகளால் எந்தப் பயனும் இல்லை. இந்நிலையில் "தலித் சிறுத்தைகள்" அமைப்பு பிரச்சாரம், போராட்டம், சமரசமற்ற தீவிர நடவடிக்கைகள் மூலம் விரக்தியிலிருந்த மக்களிடையே நம்பிக்கையை வளர்த்தது. இதனால் "தலித் சிறுத்தைகள்" அமைப்பின்தலைமையில் திரண்டு நேரடி தாக்குதலில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடுபட்டனர்.

"தலித் சிறுத்தைகள்"அமைப்பினர் 18.1.95 அன்று சாலை மறியலுக்கு அழைப்பு விடுத்தனர். சாலை மறியலுக்குப் பதிலாக கடைகளை அடைக்குமாறு கோரி வியாபாரிகளிடம் சென்றனர். இதற்கு மறுத்த தையல் கடைக்காரரிடம் ஏற்பட்ட மோதல் வலுத்துப் பெரிதாகியதும் போலீசு தலையிட்டு தடுத்தது. அன்று இரவே முதலியார் சாதியைச் சேர்ந்த ஏ.கே. கிருஷ்ணசாமி, இவர் மருமகன் பி.டி. ராஜன், சித்ரா சுப்ரமணியம், வன்னியரான கள்ளச் சாராய வியாபாரி காசி ஆகியோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி போலீசுடன் சேர்ந்து தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்கத் திட்டமிட்டனர்.

19.1.95 அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோரைத் திரட்டிக் கொண்டு சென்று "தலித் சிறுத்தைகள்" மீது நடவடிக்கை எடுக்கக் கோரினர். அப்பொழுது ஒரு கூட்டத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருப்பை நோக்கி முன்னேறவே தாழ்த்தப்பட்டவர்களும் பதில் தாக்குதலுக்குத் தயாராகியுள்ளனர். திட்டமிட்டபடி போலீசு தாழ்த்தப்பட்டவர்கள் மீது மட்டுமே தடியடி நடத்திக் கலைத்தது. இன்னொரு கூட்டத்தினர் பின்புறமாக தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்பை நெருங்கி விடவே தாழ்த்தப்பட்டவர்களில் ஒரு பிரிவினர் அதைத் தடுக்க முனைந்தனர். இதை எதிர்பார்த்து வேலி மறைவில் பதுங்கியிருந்த போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தியது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவரை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்ற சண்முகம் என்பவரை சாதிவெறியர்கள் போலீசு முன்னிலையிலேயே அடித்தும் வெட்டியும் கொன்றனர். இச்சம்பவத்தில் கலந்து கொள்ளாத தொளார் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவியான ரமேஷ் என்ற தாழ்த்தப்பட்ட மாணவரை சாதிவெறிக் கும்பல் போலீசு பாதுகாப்போடு அடித்தே கொன்றனது. ரமேஷைக் காப்பாற்ற முயன்ற தாழ்த்தப்பட்ட மக்களையும் துப்பாக்கி முனையில் தடுத்து விரட்டியது போலீசு. இச்சம்பவம் தொடர்பாக மேல் சாதி வெறியர்களையும், கொலையாளிகளையும் போலீசு கைது செய்யவில்லை. 1.2.95 அன்று தாழ்த்தப்பட்ட மக்கள் நடவடிக்கை கோரி சாலை மறியல் செய்த பின்னரும் கூட எவ்விதப் பயனுமில்லை. சம்பவத்தில் போலீசு தாக்கப்பட்டதாகக் கூறி அதைக் கண்டித்து மேல் சாதி வெறியர்கள் சுவரொட்டி போட்டு தமது கூட்டை நிரூபித்துக் கொண்டனர்.

"அடங்க மறுப்போம், அத்து மீறுவோம், திமிரி எழுவோம், திருப்பி அடிப்போம்" என்ற "தலித் சிறுத்தைகள்" அமைப்பின் முழக்கம் வெறும் உணர்ச்சிப்பூர்வமானதாக மட்டுமே இருக்கிறது. அமைப்பு கட்டுப்பாடு இல்லாமலும் வழிகாட்ட சரியான தலைமை ஆளில்லாமலும் போராட்டத்தையும் தாக்குதலையும் நடத்தித் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னலையே தேடிக் கொடுத்தார்கள். சம்பவத்தில் கைது செய்யப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களை பிணையில் எடுக்காமல் மாவட்ட மாநிலத் தலைவர்கள் செயலிழந்து கிடந்தனர். தாழ்த்தப்பட்ட, மேல் சாதி உழைக்கும் மக்களுக்கு இடையே உள்ள முரண்பாட்டைச் சரியாக கையாண்டு ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாக நாவலூரில் மேல்சாதிக்காரர்களின் அனைத்து வீடுகளையும் தாக்கி முரண்பாட்டை வளர்த்தனர். இவர்கள் ஏற்றுக் கொண்ட சாதிய விடுதலைக்குக் கூட கொள்கை, திட்டம், வழிமுறை, அமைப்பு கட்டுப்பாடுகள் அவசியம் என்பதை இப்போராட்டம் அடுத்த கட்ட வளர்ச்சியில்லாமல் தேக்கநிலையை எட்டியதன் மூலம் உணர முடியும்.

மேல்சாதி வெறியர்களின் கோரமான தாக்குதல்களுக்கும் போலீசு, அரசியல்வாதிகள், ஆதிக்க சக்திகளின் கூட்டு பலத்தோடு தொடுக்கப்படுகிற தாக்குதல்களுக்கும், சதிகளுக்கும், அக்கிரமங்களுக்கும் புரட்சியாளர்களும் ஜனநாயகவாதிகளும் தான் தக்க பதிலடி கொடுக்க முடியும்.

## தர்மபுரி போலீசின் அடாவடித்தனம்

தர்மபுரி, நல்லம்பள்ளி - பகுதிநேர நூலகத்தில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்தவர்கள் புதிய ஜனநாயகம் முதலாக சில புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுத்து அனைவரும் படிக்கச் செய்தனர். போலீசு உளவு பிரிவு (கியூ. பிரிவு) துணை ஆய்வாளர் சண்முகத்தின் உத்தரவின் பேரில் வந்த மயில்சாமி, பாலகிருஷ்ணன் ஆகியோர் மோப்பம் பிடித்து வந்து நூலக ஊழியரை மிரட்டிப் புத்தகங்களைப் பறித்துச் சென்றனர். மேலதிகாரிகளுக்குச் சிபாரிசு செய்து நூலக ஊழியரை பணிநீக்கம் செய்தனர். பு.மா.இ.மு. தோழர் கதிரவனை ரயில்வே தண்டவாளம் தர்மபுரி அருகே கழன்று இருந்ததையொட்டி விசாரணைக்கு அழைத்துச் சென்று பொய்வழக்கு போட முயன்ற அதியமான் கோட்டை போலீசு ஆதாரம் எதுவுமில்லாததால் அம்முயற்சியை கைவிட்டது. மீண்டும் 18.1.95 அன்று தோழர் கதிரவன் மற்றும் அவரது நண்பர்கள் முனுசாமி, வேலு, ஆயக்கண்ணன், வீரமணி ஆகியோரை கைது செய்து 7(1) ஏ. 151 பிரிவுகளின் கீழ் பொய் வழக்குப் பதிவு செய்தது. உளவு பிரிவு போலீசு கதிரவனை மிரட்டி உங்கள் கட்சி தலைமை யார் எனத் துருவி துருவி கேள்வி கேட்டு பயனில்லாததால் ஏமாற்றம் அடைந்தது. சேலம் மத்திய சிறையில் வைக்கப்பட்ட தோழரும் அவரது நண்பர்களும் நிபந்தனை பிணையில் வெளிவந்தனர். 80-களில் வர்க்கப் போராட்டத்தின் வீச்சின் தாக்கத்தினால் ஏற்பட்ட பீதியிலிருந்து போலீசு இன்னமும் மீளவில்லை என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது. ஜனநாயக விரோதமாக அத்துமீறி போலீசு எடுத்துவரும் இத்தகைய அடக்குமுறைகளால் போலீசு அம்பலப்பட்டு தனிமைப்பட்டே வருகிறது.


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

பத்தாம் ஆண்டு

**7 - 8**

16 பிப். - 15 மார்ச் '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## மெர்கண்டைல் வங்கி மீட்புப் போராட்டம்: நாடார் சமூகத்தினர் பகடைக் காய்களா?

"நாடார் வங்கி" என்ற பெயரில் தூத்துக்குடியில் நாடார் சமூகத்தினரால் தொடங்கப்பட்டு பின்னர் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியாக மாறியது. தூத்துக்குடியைத் தலைமையகமாகக் கொண்டு தமிழகத்திலும் இந்தியாவின் இதர பெருநகரங்களிலும் மொத்தம் 136 கிளைகளைக் கொண்டுள்ள இந்த வங்கியின் மூலதனத்தில் 64% பங்குத் தொகையை குஜராத்தைச் சேர்ந்த தரகு முதலாளிகளான ரூயா சகோதரர்களின் "எஸ்ஸார்" குழுமம் வாங்கியதன் மூலம் இந்த வங்கியின் 200 கோடி ரூபாய் சொத்துக்களையும் 900 கோடி ரூபாய் வைப்பு நிதியையும் கைப்பற்றியுள்ளது. வங்கியின் 900 கோடி ரூபாய் வைப்பு நிதியைத் தனது நிறுவனங்களுக்குக் கடனாகத் திருப்பிவிட முடியும் என்பதே இந்த வங்கியைக் கைப்பற்றுவதற்கான முக்கிய காரணமாகும். இந்த வங்கியை முக்கியமாக இதுவரைக் கட்டுப்படுத்தி வந்த, வங்கி இயக்குனர்களாகவும் தரகுப் பெரு முதலாளிகளாகவும் உள்ள இரு நாடார் குடும்பங்களில் எது தனது பங்கை விற்று உடனடி லாபமீட்டுவது என்ற போட்டியில் இருந்தன. அதில் ஒரு பிரிவினர் முந்திக் கொண்டு தனது பங்குகளை குஜராத்தி பனியாக்களுக்கு விற்று துரோகமிழைத்துள்ளனர். இது நாடார் சமூக ஒற்றுமைக்கும் உணர்வுக்கும் ஏற்பட்ட பேராபத்து, அவர்கள் சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால் என்கிற முறையில் அச்சாதி - சமூகத் தலைவர்களும், அரசியல் பிரமுகர்களும் வியாபாரிகள் - முதலாளிகளும் தமிழினவாதிகளும் முன்னின்று வங்கி மீட்பு இயக்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இழந்த வங்கியை மீண்டும் பெறுவதற்கான நிதி சேர்ப்பும் போராட்டங்களும் பெருமளவு நடக்கின்றன.

தமிழகத்தில் தாழ்த்தப்பட்டோரைப் போலவே நாடார் சமூகத்தினரும் நீண்ட நெடுங்காலமாக இந்துத்துவ சாதிமுறையின்படி, பார்த்தாலே தீட்டு என்று அடக்கியொடுக்கப்பட்டனர். இச்சமூக இழிவுக்கு எதிராக அவர்கள் கட்டி வளர்த்த கூட்டுத்துவ வாழ்வு - உறவின்முறை, சுயமுயற்சி, கடின உழைப்பு, கட்டுப்பாடான பொருளாதார வாழ்வு மூலம் நாடார் சமூகத்தில் பலர் சிறு - பெரு வியாபாரிகளாகவும், முதலாளிகளாகவும் வளர்ந்தனர். மரமேறும் நாடார் சமூகத் தொழிலாளியிடமிருந்துகூட 5 ரூபாய் என பங்குகள் திரட்டப்பட்டு, ஆறுமுகநேரி ராஜா, பரிவேச முத்து நாடார், பட்டிவீரன்பட்டி சௌந்திரபாண்டிய நாடார் முதலானோரின் முன்முயற்சியால் நாடார் வங்கி உருவானது.

ஆனால் ஒடுக்கப்பட்ட நாடார் சமூகத்தின் நலனுக்காக உருவான இந்த வங்கி, காலப் போக்கில் நாடார் சமூகத்திலேயே உள்ள ஒரு சில மேட்டுக்குடி குடும்பங்களின் ஆதிக்கத்தின் கீழானதாக மாறிப்போனது. இச்சிறுபிரிவினர் தமது தன்மானத்தை இழந்து பொருளாதார ரீதியில் ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாச சேவை செய்யும் தரகு அதிகார முதலாளிகளாகவும், அரசியல் ரீதியில் காங்கிரசு, பாரதீய ஜனதா, எம்.ஜி.ஆர். - ஜெயா கட்சித் தலைவர்களாகவும் மாறினர். இவர்கள்தான் இன்று தென் மாவட்டங்களில் பார்ப்பன - இந்துவெறி அமைப்புகளின் புரவலர்களாகவும் சமூக அடித்தளமாகவும் உள்ளனர். இச்சிறுபிரிவினரின் துரோகத்தால், நேற்றுவரை பார்ப்பனீய சாதிய ஒடுக்குமுறையால் இழிவுபடுத்தப்பட்டு நசுக்கப்பட்ட நாடார் சமூகத்தில் சிலர் இந்துவெறி அமைப்புகளின் பிரமுகர்களாகவும், பார்ப்பன கலாச்சாரத்திலும் மூழ்கிக் கிடக்கின்றனர். நாடார் வங்கியேகூட நாடார் சமூகம் முழுவதன் கூட்டு அமைப்பாக இல்லாமல் ஓரிரு மேல்தட்டு குடும்பங்களின் பிடியில் சிக்கியதற்கும், தமது சமூகத்துக்கே இச்சிறுபிரிவினர் துரோகமிழைக்கவும் அடிப்படை என்ன? ஒடுக்கப்பட்ட நாடார் சமூகத்திலேயே ஒரு மேல்தட்டுப் பிரிவினராகிய இவர்கள், தரகு அதிகார முதலாளிகளாக மாறிவிட்டதே முதன்மையான காரணமாகும். தமிழினம், சாதி - சமூகத்தின் ஆதரவோடு தேசிய முதலாளிகளாக வளர்ந்து, இன்று அதற்கே துரோகமிழைக்கும் தரகு அதிகார முதலாளிகளாக மாறி அகில இந்திய தேசியம் என்ற கட்டமைப்பில் ஓர் அங்கமாகி ஆதாயமடைந்து வருவதே இதற்கு அடிப்படையாகும்.

அதேசமயம், இப்போது நடக்கும் வங்கியை மீட்கும் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவது நாடார் சமூகத்தின் முன்னாள் வங்கி இயக்குனர்கள் உட்பட முன் சொன்னவாறு மற்றொரு பிரிவு தரகு அதிகார முதலாளிகள்தான்! தமிழினம், சாதி - சமூகம், வடவர் எதிர்ப்பு முதலான சொல்லடுக்குகளுடன் நாடார் சமூகத்தைத் திரட்டி தமது தரகுத் தொழில்களை விரிவாக்கிக் கொள்ள இவர்கள் போர்க்கொடி தூக்குகின்றனர். நாடார் சமூகத்தைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி தமக்கென இவர்கள் தனி அதிகாரத்தையும் நிதியையும் கைப்பற்றி, தமது தரகுத் தொழிலை விரிவாக்கி ஆதாயமடைவதே இப்பிரிவினரது நோக்கமாகும். அதன் ஒரு பகுதியாக நாடார் சமூகத்தின் தன்மானச் சின்னமாக விளங்கிய மெர்கண்டைல் வங்கியை சேட்டுகளிடமிருந்து மீட்டு, அதை நாடார் சமூகம் முழுவதன் கூட்டு அமைப்பாக மாற்றுவது அவர்கள் நோக்கமல்ல.

எனவே, இந்த வங்கி இழப்பும், மீட்புப் போராட்டமும் காட்டும் படிப்பினை என்னவென்றால் தமது சொந்த சாதி - சமூகத்தினர் என்கிற அடிப்படையிலான ஒற்றுமையின் கீழ் ஒளிந்து கொண்டுள்ள இன, வர்க்க எதிரிகளை அடையாளங்கண்டு அவர்களின் தலைமையை நிராகரிக்க வெண்டும். பொருளாதார ரீதியில் தரகு முதலாளிகளாகவும், அரசியல் ரீதியில் ஆர்.எஸ்.எஸ்., காங்கிரசு, ஜெயா கும்பலின் ஆதரவாளர்களாகவும் உள்ள அவர்களை எதிர்க்க போராட்டத்தை தரகு முதலாளித்துவ எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ சாதிய முறைக்கு எதிர்ப்பு என புரட்சிகர ஜனநாயக உணர்வோடு முன்னெடுத்துச் சென்று வங்கியை தேசிய முதலாளிகளும் வியாபாரிகளும் நாடார் சமூக மக்களும் கைப்பற்றவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# சேஷன் சேட்டைகளின் பின்னணி என்ன?

இந்திய நிர்வாக சேவைத் - ஐ.ஏ.எஸ் - துறை வரலாறிலேயே திருநிலை நாராயணய்யர் சேஷன் - அதுதான் இந்தியத் தலைமை தேர்தல் ஆணையாளர் டி.என்.சேஷன் - அளவுக்குப் பிரபலமான அதிகாரி இதுவரை யாருமே கிடையாது. குறிப்பாக எந்தவொரு தலைமைத் தேர்தல் ஆணையாளரும் இப்படிப்பட்ட கவன ஈர்ப்பு மையமாக இருந்ததில்லை.

''டி.என். சேஷன், இப்போது நடுத்தர வர்க்கத்தின் நாயகனாகத் திகழ்கிறார்; தேர்தல்கள் அறிவிக்கப்படும் மாநிலங்களில் எல்லாம் மக்கள் அதிசயங்களைக் காண்கிறார்கள். முன்பு ஒரு பஞ்சாயத்துத் தேர்தலில் காணப்பட்ட பரபரப்பு, படாடோபம், சலசலப்பு கூட இப்போது இல்லை. சேஷன் பதவிக்கு வந்ததில் இருந்து அரசியல் கட்சிகளுக்கு அவர் சிம்ம சொப்பனமாகத் தெரிகிறார். படித்தவர்கள் மத்தியில் அவரது ''ரசிகர்கள்'' பெருகி வருகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் இப்போது அரசியல் கட்சித் தலைவர்கள் அல்ல, சேஷன் அலை வீசுகிறது'' என்று பெரும் பத்திரிகைகள் வாய் நிறையப் புகழுகின்றன.

ஓரிரு பத்திரிகைகள் ''1994-ஆம் ஆண்டின் தலைசிறந்த மனிதராக'' அறிவித்திருக்கின்றன. நாட்டின் தேர்தல் முறையைத் தூய்மைப்படுத்துவதில் சேஷனின் பங்கைப் பாராட்டி 5 லட்சம் ரூபாய் விருதளித்துள்ளது, ''சர்வதேச சுலபமுறை'' என்னும் சமூகசேவை நிறுவனம். விரைவிலேயே வெளிநாட்டு விருதுகளும் வந்துசேரும் என்று நம்பலாம்.

சேஷனுடைய நடவடிக்கைகளினால் நேரடியாக பாதிக்கப்படும் அரசியல் தலைவர்கள் தவிர, சேஷனுடன் சக அதிகாரியாகவோ, கீழ்நிலை அலுவலகராகவோ பணியாற்றியவர்கள் தவிர பல்வேறு தரப்பினரும் சேஷனைப் பாராட்டுகின்றனர்; அல்லது தயக்கம் கலந்த அங்கீகரிப்பு அளிக்கின்றனர். நேர்மையான நீதிபதி என்று பெயர் பெற்ற பக்தவார் லெண்டின், தி.மு.க. தலைவர் கருணாநிதி, சிவசேனா தலைவர் பால் தாக்கரே என்று சேஷனுக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளவர்கள் பட்டியல் நீளமானது.

ஒவ்வொரு நாளும் சினிமா நடிகர், நடிகைகளுக்கு ரசிகர்கள் எழுதுவதைப் போல ஏராளமான கடிதங்களை சேஷன் பெறுகிறார் - அவ்வளவும் பாராட்டு, புகழ் பாடுகின்றன. வாக்காளருக்கு அடையாள அட்டை வழங்கியே தீர வேண்டும் என்று சேஷன் நிபந்தனை போட்டபோது, அதற்கு நிதியில்லை என மத்திய அரசு கை விரித்தது; நாங்கள் நன்கொடையாகத் தருகிறோம் எனத் தனியார் நிறுவனங்களும், நபர்களும் கூட பணம் அனுப்பி சேஷனுக்கு ஆதரவு காட்டினர்.

சேஷன் மீதான இவ்வளவு கவர்ச்சி ஏற்படுவதற்குக் காரணம் என்ன? இவர்கள் அனைவரின் கருத்திலும் பொதுவாகச் சொல்லப்படுவது இதுதான்: நாடு முழுவதும் லஞ்ச, ஊழல், அதிகார முறைகேடுகள் புழுத்து நாறுகிறது. குறிப்பாகத் தேர்தல் முறையே, கோடி கோடியாகக் கொட்டப்படும் கருப்புப் பண பலம், கிரிமினல், மயமான வன்முறை வெறியாட்டம், ஜாதி-மத வகுப்புவாத குறுகிய சக்திகள் ஆதிக்கத்தினால் சிக்கி சீரழிந்துவிட்டது. ஆளுங்கட்சிகளின் அதிகார முறைகேடுகள் மூச்சுத் திணறடிக்கின்றன. மொத்தத்தில் சட்டம் - ஒழுங்கு, நீதி- நேர்மை எல்லாம் செத்துப் போய் அராஜகம் தலைவிரித்தாடுவதால் ஜனநாயகத்தின் மீது மக்கள் நம்பிக்கையிழந்து விட்டனர்.

இத்தகைய நிலையைச் சீர்த்திருத்துவதற்கு ஒரு துணிச்சல்மிகு 'நாயகன்' தேவை என்பதுதான் இவர்கள் அனைவரது விருப்பம். இதனால் சேஷன் மட்டுமல்ல வேறு யார் இதைச் செய்வதாக முன்வந்தாலும் இந்த நடுத்தர வர்க்கத்தின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும். ஏற்கனவே கெட்டிதட்டிப் போன அமைப்பின் மீது ''போர் தொடுப்பதாகப்'' பிரகடனப்படுத்தும் எவருக்கும் இத்தகைய வரவேற்பு இருந்திருக்கிறது. அரசியல் உணர்வு பெறாத தொழிலாளர்கள்கூட அவர்கள் முற்போக்கா, பிற்போக்கா, நேர்மையாளரா என்று பார்ப்பதில்லை; ஆதரவு தெரிவித்துவிடுகிறார்கள்.



அதாவது நிலைமை மிக மோசமாகி விட்டது; இதைச் சீர்திருத்த வேண்டுமென்றால், ஒரு சர்வாதிகாரி வேண்டும்; அல்லது ஒரு அவதாரம் வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த மாதிரியான சமயங்களில் ரோனால்டு ரீகன், மார்க்கெரட் தாட்சர், இதிலேயே கவர்ச்சி கலந்தால் இந்திரா, எம்.ஜி.ஆர். போன்ற நபர்கள், இன்னும் ஒருபடி மேலேபோய் இட்லர் போன்ற அப்பட்டமான பாசிச வெறியர்கள்கூட மக்களின் பெரும் ஆதரவு பெறுகின்றனர்.

''சர்வதேச சுலபமுறை'' என்ற அமைப்பின் நிறுவனர் பிந்தேஷ்வர் பதக் சொல்கிறார்: ''ஒரு தூய்மையான பொது வாழ்க்கைக்கும், உறுதியான ஜனநாயக அமைப்புக்கும் மக்கள் ஏங்குகின்றனர்; சேஷன் அதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்''.

சேஷனுக்கு முந்தைய தலைமைத் தேர்தல் ஆண்ணயாளர்கள் அனைவரும் முகமில்லாத மனிதர்களாய், கொஞ்சங் கூட சுயமுடிவெடுக்காதவர்களாய், முழுக்க முழுக்க ஆளும் கட்சியின் எடுபிடிகளாக இருந்தனர். ஆனால் சேஷன் பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே பின்வரும் நடவடிக்கைகளினால் தலைப்புச் செய்தியானார்.

● எதிர்க்கட்சிகளான சி.பி.எம்.; ஜனதா தள ஆட்சி நிலவும் மாநிலங்களில் மத்திய ரிசர்வ் படையை நிறுத்துவது; தேர்தல் அதிகாரிகளை நியமிப்பது; மன நிறைவளிக்கும்படி சட்டம் ஒழுங்கை பராமரிப்பது; தேர்தல் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது; மனநிறைவேற்படாத வகையில் தேர்தல் நடந்தால் மறுவாக்குப் பதிவுக்கு உத்திரவிடுவது; அல்லது பலமுறை தேர்தல்களைத் தள்ளி வைப்பது - இவற்றின் மூலம் அவற்றின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். தேசிய முன்னணி, இடது சாரிக் கட்சிகளின் வெறுப்புக்கு ஆளானார்; அவை அடிக்கடி சேஷனுக்கு எதிராக உயர்நீதி மன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் வழக்குப் போட்டன. சேஷனைப் பதவி நீக்கும் தீர்மானம் கொண்டு வர முயன்று தோற்றதும், சேஷனுக்குச் சாதகமாகத் தீர்ப்புகள் வந்ததும் அவர் மேலும் துணிவும், ஆதரவும் பெறத் துவங்கினார்.

● அரசியல் கட்சிகளின் திட்டங்கள், விதிகள் அரசியல் சட்டத்திற்கு முரணாக இருக்கிறதா என்பதைக் கறாராகப்


படிப்பகம்

www.padippakam.com

பரிசீலித்து, உறுதி பெற்றுக் கொண்டு மறு அங்கீகாரம் அளித்தார்; அரசியல் கட்சிகளின் பிளவையொட்டி, தேர்தல் சின்னம் ஒதுக்கீடு போன்ற வழக்குகளில் கட்சி விவகாரங்களுக்குள் புகுந்து தனது விமர்சனங்களைச் சொல்ல ஆரம்பித்தார். இதையே காரணியாகக் கொண்டு அரசியல் கட்சிகளில் முறையாகத் தேர்தல்கள் நடத்தி ஜனநாயகப் பூர்வமாக நடக்க வேண்டும்; கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதனால் அரசியல் கட்சிகள் ஆத்திரமடைந்தாலும் மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்றார்.

● அரசு அமைப்பை - வாகனங்கள் முதலியவற்றை மந்திரிகள் பயன்படுத்துவதை எதிர்த்தார். பலராம் ஜாக்கர், சந்தோஷ் மோகன் தேவ் ஆகியோர் அரசு விமானத்தைப் பயன்படுத்தியது; தேர்தல் அதிகாரிகள் கூட்டத்தில் தேவ் பேசியது மீது விசாரணை; தேர்தலுக்கு முன்பு சலுகைகள் அறிவிப்பதைத் தடுப்பது; ஆந்திரத் தேர்தலின் போது நடத்தை விதியை மீறியதற்காக சீதாராம் கேசரி, கல்பனாத் ராய் ஆகிய மத்திய மந்திரிகளை பதவி நீக்கம் செய்யும்படி சிபாரிசு செய்தது ஆகியவை பரபரப்பையும், ஆதரவையும் பெற்றன.

● நாடாளுமன்றத்தின் மாநிலங்களவைக்கு அந்தந்த மாநிலத்தில் வாழுபவரே போட்டியிட்டு எம்.பி. ஆக முடியும் என்பது விதி. ஆனால், எல்லா அரசியல் கட்சிகளும் இந்த விதியை மீறி மந்திரிகள் உட்பட முக்கிய பிரமுகர்களுக்குப் போலியான முகவரி கொடுத்து வெவ்வேறு மாநிலங்களில் இருந்து எம்.பியாக்கி விடுவது வழக்கமாக உள்ளது. இது ஒரு குற்றம் என்கிற முறையில் விசாரணைக்கு உத்திரவிட்டார். இதனால் நிதி மந்திரி மன்மோகன் சிங் போன்ற பிரபலங்களையே பீதியடையச் செய்தார். பிரதமர் முதல் மாநில முதல்வர் வரை பதவியேற்றபின் குறிப்பிட்ட காலத்துக்குள் கீழவைக்குத் தேர்தலில் நின்று வருவதற்கான நிச்சயமற்ற நிலையை உருவாக்கினார். அதன் மூலம் அவர்களது முறைகேடுகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து அம்பலப்படுத்தினார்.

● தேர்தல் கமிசனை பல உறுப்பினர் அமைப்பாக்கி சேஷனின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் மத்திய அரசின் முயற்சிகளை முறியடித்தார். மேலும் இரண்டு அதிகாரிகளைச் ஆணையாளர்களாக நியமித்தபோது அவர்களை அலட்சியமாக நடத்தி செயலிழக்க வைத்தார். உச்ச நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிரான தீர்ப்பு வாங்கினார். சேஷனுடைய அதிகாரத்தைக் குறைக்கும் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் வந்தபோது அரசியல் கட்சிகளுக்கிடையிலான பிளவு, சர்வ கட்சிகளிலும் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி அதைத் தோல்வியுறச் செய்தார். இவற்றால் சேஷன் எவ்வளவு எதிர்ப்புகள் தோன்றினாலும் எதிர்த்து நிற்கும் துணிச்சலுடையவர் என்ற எண்ணம் பரவியது.

● 1995 ஜனவரி முதல் தேதிக்குள் வாக்காளர் அனைவருக்கும் புகைப்படத்துடன் அடையாள அட்டை வழங்க வேண்டும்; இல்லையானால் தேர்தல் நடத்தவே விடமாட்டேன் என்று எல்லா மாநில, மத்திய அரசுகளுக்குக் கெடு வைத்தார். அவை முதலில் எதிர்த்தன; ஆனால் வாக்காளரிடையே சேஷனின் முடிவுக்கு ஆதரவு பெருகிவருவது கண்டஞ்சிய அரசுகள், காலக்கெடுவை நீட்டிக்கும்படி கேட்டன. நிதி நெருக்கடி, கால அவகாசம் போன்ற காரணங்களை வைத்து மாநில அரசுகள் அடையாள அட்டை வழங்குவதை அமுலாக்க மறுப்பதும், சேஷன் அதை அமுலாக்கும்படி நிர்பந்திப்பது, தேர்தல் நடக்குமா என்கிற நிச்சயமற்ற நிலையும் மக்களிடையே பரபரப்பு ஏற்படுத்தி வருகிறது. அடையாள அட்டை கள்ள ஓட்டு முறையை ஒழிக்கும் அனைத்து நோய் தீர்க்கும் மருந்து என்ற கருத்து நிலவுவதால் சேஷனுக்கு ஆதரவு பெருகுகிறது.

> மக்களுடைய அதிகபட்ச வெறுப்புக்குள்ளாகி இருப்பவர்கள் அரசியல்வாதிகள். ஆகவே அவர்களை ஏசுவதென்பது - மிகமிக கேவலமாகத் திட்டுவது நிச்சயம் எடுபடும் என்று நம்பிச் செயல்படுகிறார், சேஷன்.

● அரசியல் கட்சிகள் தேர்தல் நடத்தை நெறிகளை மீறுவதைத் தடுப்பதாக சேஷன் எடுத்துவரும் நடவடிக்கைகள் வாக்காளரிடையே பெரும் செல்வாக்கைப் பெற்று வருகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் ஏராளமான துணை இராணுவம் சட்டம் - ஒழுங்கைக் காப்பதற்கென நிறுத்தப்படுகிறது. தேர்தல் பார்வையாளர்கள் எனச் சிறப்பு அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர். வாக்குப்பதிவும் எண்ணிக்கையும் ''ஒளி நாடாவில்'' படம் எடுக்கப்படுகிறது. தனியார், பொதுச் சுவற்றில் அனுமதி இல்லாமல் விளம்பரம் செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் செலவுகளை அன்றாடம் நேரில் சோதித்திறிந்து தணிக்கை செய்வது; சாதி-மத-இன உணர்வைத் தூண்டும் பிரச்சரங்கள் கண்காணிக்கப்படுவது; தேர்தல் தில்லுமுல்லுகள் நடந்ததாகப் புகார் வந்தால் விசாரணை, மறுவாக்குப் பதிவு, தேர்தலையே ரத்து செய்வது சேஷன் அனுமதியின்றி முடிவுகள் அறிவிக்காமல் நிறுத்தி வைப்பது ஆகியவை அவரை மேலும் பிரபலப்படுத்துகின்றன.

தேர்தல் தொடர்பான மேற்கண்ட நடவடிக்கைகள் மட்டுமின்றி சேஷனின் பிரபல்யத்துக்கு மேலும் சில காரணங்கள் உள்ளன. ''சேஷன் - ஒரு நெருக்கமான கதை'' என்கிற பெயரில் பத்திரிக்கையாளர் கோவிந்தன் குட்டியை வைத்து அவரது வாழ்க்கை வரலாறு வெளி வந்துள்ளது. அதில் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், ராஜீவ் கொலை போன்று பல்வேறு விவகாரங்களுக்குரிய செய்திகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. முக்கியமாகத் திராவிடக் கட்சிகளும், காங்கிரசின் போட்டிக் குழுக்களும் அது பிரபலமடைவதற்கான வழிவகைகள் செய்துள்ளன. முன்பு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் நாடு முழுவதும் பொதுத் தேர்தல்கள் நடக்கும். ஆனால் இப்போது ஆண்டு முழுவதும் எங்கேயாவது ஒரு தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கைக் காரணங்காட்டி தேர்தல்கள் பல மாதங்கள் பல நாட்கள் நடந்து கொண்டே இருக்கும்படி ஏற்ப செய்கிறார் சேஷன். இதுவும் அவரைப் பற்றிய பேச்சு அடிபட்டுக் கொண்டே இருப்பதற்குக் காரணமாகும்.

தேர்தல்கள் தொடர்பான மேற்கண்ட நடவடிக்கைகள் தான் சேஷன் இவ்வளவு தூரம் பிரபலமடைவதற்குக் காரணமா? ''நான் என் கடமையைச் செய்கிறேன். அது சிலரை மகிழ்ச்சியடையச் செய்கிறது. சிலரை வெறுப்படையச் செய்கிறது. ஆனால் தகுதியானதையெல்லாம் நான் எடுத்துக் கொள்கிறேன்'' என்று ஒரு கர்மயோகியைப் போல சேஷன் பேசுகிறார்.

இது உண்மையா? தனது கடமையைச் செய்வது, ஜனநாயக அமைப்பை - தேர்தல் முறையைத் தூய்மைப்படுத்தும் பணியில் தான் சேஷன் ஈடுபட்டுள்ளாரா? வேறு எதுவும் அவருக்கு நோக்கம் கிடையாதா? மற்றவர்கள் மீது சரமாறி குற்றங் காணும் சேஷன் கரைபடியாத கரங் கொண்டவரா?

சேஷனின் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஆதரிக்கும் சில பிரபலங்கள் கூட, ''எல்லாம் சரி! சேஷன் ஏன் தன் பணிகளை அமைதியாகச் செய்வதில்லை? ஏன் இவ்வளவு கூச்சல் போடுகிறார்?'' ''அவருக்கு தலைக்கணம் ஏறிவிட்டது'' என்கிறார்கள். ''சேஷன் தன்னடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்'' என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியே கூறுகிறார்.

ஆனால் அடக்கி வாசிக்க வேண்


படிப்பகம்

www.padippakam.com

டும் என்ற எண்ணம் சேஷனிடம் துளியும் கிடையாது. தனது ஒவ்வொரு நடவடிக்கையும், ஒவ்வொரு பேச்சும் பத்திரிகைகள், வானொலி - வானொளித் தலைப்புச் செய்தியாக வர வேண்டும் என்பதைக் குறி வைத்தே அவர் செயல்படுகிறார் தன்னைப் பற்றிய செய்திகளை எல்லாம் நுண்படச் சுருளாக்கிப் பாதுகாக்கிறார். தான் பங்கேற்கும் விழாப் படங்கள், வீடியோ நிகழ்ச்சிகள், தனக்கு வரும் ரசிகர் கடிதங்களை எல்லாம் தனி அறை ஒதுக்கி ஆவணக் காப்பகமாக்கி வருகிறார்.

அவை எதிர்காலத்தில் தனது வரலாற்றுச் சிறப்பைச் சொல்லும் என்று நம்புகிறார். தான் இந்த நாட்டின் பிரதமராகவோ, அரசுத் தலைவராகவோ (ஜனாதிபதி) வர மட்டுமே விரும்புவதாகவும், வேறெதுவும் தனது தகுதிக்குப் போதாது எனவும், இப்பதவிகளும் கூட கறைபடிந்தவை ஆகிவிட்டன எனவும் சேஷன் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட பேராசையை மனதில் வைத்துக் கொண்டுதான் சேஷன் செயல்படுகிறார்; அதற்கு முதல்படியாகத் தன்னைச் சுற்றி ஒரு கவர்ச்சியை, பிரபலத்தைத் தன்க்கே உரிய முறையில் கட்டி வளர்க்கிறார். சாக்கடையில் நெளியும் பன்றியாக இவ்வளவுகாலமும் இந்த அதிகாரவர்க்க அமைப்பில் ஊறிய சேஷன் இப்போது அதற்கு முற்றிலும் வெளியிலுள்ள புனிதரைப் போல பேசுகிறார். எந்தச் சொல் மக்கள் மனதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதைப் போல சூடாகப் பிடிக்கும், எதிரியை ஆத்திரமடையச் செய்யும், தன்னைப் பற்றிய பரபரப்பான விவாதத்தைக் கிளப்பும் என்று தெரிந்தெடுத்துப் பேசுகிறார்.

மக்களுடைய அதிகபட்ச வெறுப்புக்குள்ளாகி இருப்பவர்கள் அரசியல்வாதிகள். ஆகவே அவர்களை ஏசுவதென்பது - மிக மிகக் கேவலமாகத் திட்டுவது நிச்சயம் எடுபடும் என்று நம்பிச் செயல்படுகிறார் சேஷன். அடுத்து அதிகாரவர்க்கத்தை முதுகெழும்பில்லாத புழு என்கிறார்; பத்திரிகையாளர்களை விபச்சாரிகள் என்கிறார்.

''ஜனநாயகம் என்பது சிலருக்காக, சிலரால், சிலரே நடத்துவதாக சீரழிந்து விட்டது. தேர்தல்கள், அரசியல் நடவடிக்கைகள் எல்லாம் பணம், ஊழல், கிரிமினல் மயமாகிவிட்டது. ஊழல், பிளவுவாத சக்திகளுக்கு இடமளிக்காதீர்கள்; விழித்துக் கொள்ளவில்லையானால் இந்தியா ஒரு போஸ்னியா ஆகிவிடும்'' என்கிறார். ''நாடு துயரத்தில் சிக்கியுள்ளது; நிர்வாகப்பிரிவினர் சிக்கலில் மாட்டியுள்ளனர்; நீதியும் கிடைப்பதில்லை. நான் ஆத்திரமூட்டப்பட்ட பிராணியாக உள்ளேன்.'' ''வி.ஐ.பி - (மிகமுக்கிய நபர்) என்றால் வேலையில்லாத பயல்'' என்று பொருள் என்று பிரமுகர்களைத் தாக்குகிறார்.

இப்படி பேசுவதற்கு சேஷனுக்கு ஏதாவது அருகதை இருக்கிறதா? துளியும் கிடையாது. ''சோ'', சுப்பிரமணிய சுவாமி, மணிசங்கர்அய்யர், வைஜயந்திமாலா, வெங்கட்ராமன், ஜெயலலிதா போன்ற பார்ப்பன-பாசிச-பிழைப்புவாதிதான் சேஷன். இன்று அதிகார வர்க்கத்தினரை முதுகெலும்பில்லாத புழு என்று கூறும் இவர், அரசியல்வாதிகளின் ''காலை நக்கி''ப் பதவி உயர்வுகளைப் பெற்றார் என்று சேஷனுடைய சக அதிகாரிகள் சாட்சியம் கூறுகிறார்கள். ராஜீவ் காந்தியின் கார் கதவைத் திறந்து விட்டுக் காத்திருப்பார்; ''லிப்ட்'' மூலம் ராஜீவ் இறங்குகிறார் என்றால் தனது பானை வயிறைத் தூக்கிக் கொண்டு மூச்சிறைக்க படிகளில் ஓடி இறங்கி அவர்



சேஷனிடம் கையெழுத்து வாங்கும் ரசிகைகள்

பார்வையில்படும்படி நின்றதையும் பலர் பார்த்திருக்கின்றனர். சேஷன் இராணுவத்துறைச் செயலாளராக இருந்தபோது ராஜீவின் நெருங்கிய நண்பர் அருண்சிங் இராணுவத் துணை மந்திரி. அவரைக் காண சேஷனுடன் சென்ற அதிகாரிகள் இருக்கைகளில் உட்கார்ந்து கொள்ள சேஷன் மட்டும் நின்றுகொண்டே இருந்தார்; மந்திரி கேட்டதற்கு, ''ஐயோ! தங்கள் அனுமதியில்லாமல் எப்படி உட்காருவது?'' என்று குழைக்கும்பிடு போட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட நடத்தையினால்தான் மிக வேகமாக அதிகாரத் தாழ்வாரத்தில் முக்கிய இடங்களைப் பிடித்து, இன்றைய பதவிக்கு உயர்ந்தார் சேஷன். தலைமைத் தேர்தல் கமிசன் பதவிக்குரிய உரிமையும் தகுதியும் உடைய ரமாதேவி என்கிற அதிகாரியை ஒதுக்கிவிட்டு சேஷன் அப்பதவியைப் பிடித்ததே சுப்பிரமணிய சாமி, ராஜீவ் காந்தி, சந்திரசேகர், சந்திரா சுவாமி ஆகியோரின் சிபாரிசு - தயவினால்தான்.

அதேசமயம், தனக்குக் கீழிருந்த ஊழியர்களைப் பாசிச வக்கிரத்தோடு பழிவாங்குவதே சேஷனின் வழக்கமாக உள்ளது. ஒருமுறை வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு வந்திறங்கிய சேஷன், காருக்குள் ஒரு காலை ஊன்றி நின்று திமிரோடு காரோட்டியை அழைத்தார். அவரது அடையாள அட்டையைக் கேட்டு வாங்கித் தனது சட்டைப் பையில் போட்டுக் கொண்டு, ''உன்னை வேலை நீக்கம் செய்துவிட்டேன், வீட்டுக்குப் போ!'' என்று கட்டளையிட்டு விட்டு உள்ளே போய்விட்டார். காரணம் அறியாத காரோட்டி அதிர்ச்சியில் உறைந்து போனார்.

அதேபோல ஒருமுறை அலுவலகத்திற்குள்ளே நுழைந்த சேஷன், ஒரு பெண் ஊழியர் தனது இரு உறவினர்களுடன் பார்வையாளர் அறையில் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அந்த ஊழியரை அழைத்து ஏசியதுடன், அப்போதே பணி நீக்க உத்திரவு போட்டார். ஊழியர் ஒருவர் இறந்து போனபோது, அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவோ, அனுதாபம் தெரிவிக்கவோ சக ஊழியர்களை அனுமதிக்காது வேலை வாங்கியிருக்கிறார். சமநிலையிலோ, கீழ்நிலையிலோ பணிபுரியும் அதிகாரிகளுக்குத் தனது அறையில் உட்கார இருக்கைகள் கூடத் தரமாட்டார். இப்படிப்பட்ட வக்கிரம் பிடித்த பாசிஸ்டுக்கு இப்போது ஜனநாயகத்தின் மீது கரிசனை என்றால் நம்பமுடியுமா?

லஞ்ச-ஊழல் குறித்து வெகுவாக அலட்டிக் கொள்ளும் சேஷன், பெரிய சங்கராச்சாரி சாவுக்கு திருவனந்தபுரத்தில் இருந்து சென்னைக்குத் தனிவிமானம் மூலம் பறந்துவந்தார்; அதற்கான கட்டணம் 96,000. ரூபாய் இந்தியப் பெருதரகு முதலாளி அம்பாணி செலுத்தியிருக்

படிப்பகம்

தொடர்ச்சி 23-ம் பக்கம்

www.padippakam.com

## வெள்ளமெனப் பாயும் அந்நிய மூலதனம்

புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்த கடந்த நான்கு ஆண்டுகளுள் இந்தியாவில் நுழைந்துள்ள மொத்த அன்னிய மூலதனத்தின் மதிப்பு 27,340 கோடி ரூபாய். இதில் கடந்த ஒரே ஆண்டில் 1994-ல் மட்டும் 14,190 கோடி ரூபாய்க்கான அன்னிய மூலதனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1991-ம் ஆண்டில் 950-ஆக இருந்த அன்னிய மூலதன மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தங்கள், 94-ம் ஆண்டின் இறுதிக்குள் 1854 என இருமடங்காக உயர்ந்துள்ளது. இந்த அன்னியக் கொள்ளையில் முதலிடம் வகிப்பது அமெரிக்கா. கடந்த நான்கே ஆண்டுகளுள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள அமெரிக்க மூலதனத்தின் மதிப்பு மட்டும் 3461 கோடி ரூபாயாகும்.

## ''ஷாரியத்'' எனும் சாத்தான்

பாகிஸ்தானைச் சேர்ந்த சாலாமத் மாசிக் என்ற 14 வயது சிறுவனுக்கு, ''இஸ்லாம் மதத்தையும் நபி நாயகத்தையும் இழிவுபடுத்தி விட்டான்'' என்ற குற்றச்சாட்டின் பேரில் ''ஷாரியத்'' சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களின் முன்பு இச்சிறுவன் மசூதியொன்றின் சுவற்றில் மதத்தை இழிவுபடுத்தும் வாசகங்களை எழுதியதாக ஒரு மதகுருமார் இச் சிறுவனின் மீது குற்றஞ் சுமத்தியதை அடுத்து இவ்வழக்குத் தொடரப்பட்டது. ''அச் சிறுவன் எழுதப்படிக்கத் தெரியாதவன்'' என்ற எதிர்க்கட்சி வக்கீலின் வாதத்தைத் தீர்ப்பு வழங்கிய நீதிபதி கண்டு கொள்ளவேயில்லை.

## மலிவு விலை அரிசி பலன் யாருக்கு?

ஆந்திர மாநிலத்தில் கொண்டு வரப்பட்டுள்ள மலிவு விலை அரிசி கவர்ச்சித் திட்டத்தால் உண்மையிலேயே பலன் அடைகிறவர்கள் யார் தெரியுமா? மிகப் பெரிய வர்த்தகச் சூதாடிகளும் நியாயவிலைக் கடைகளில் வேலை செய்யும் ஊழல் பேர்வழிகளும் தான். இம்மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் மட்டும் மலிவு விலை அரிசியினைப் பெற வழங்கப்பட்டுள்ள வெள்ளை நிற அட்டைகளுள் கால் பாகம் - 1,42,500 அட்டைகள் இவர்கள் கைகளில் தான் உள்ளன. திடீர் செலவுகளைச் சமாளிக்க இந்த அட்டைகளை வறிய மக்கள் நூறுக்கும் இரு நூறுக்கும் அடகு வைப்பதும், போலி அட்டைகளும் தான் இவை. இரண்டு ரூபாய்க்கு இந்த அரிசியை வாங்கி பன்னிரெண்டு ரூபாய் வரை விற்பதால், இந்த ஆண்டில் மட்டும் இவர்கள் ஒரு கோடிக்கும் அதிகமாக இலாபம் சம்பாதித்துவிடும் வாய்ப்புள்ளது.



## சிவந்த கண்கள் கவனிக்கட்டும்



மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறுவன் சலாமத் மாசிக் (வலது) மற்றும் ரஹ்மத் மாசிக்.

## மனித நாகரிகத்திற்கு சவால் விடும் போலீசு

குஜராத் மாநிலத்தின் பாஞ்ச் மஹல் மாவட்டத்திலுள்ள தேசர் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கிரனும் திலீப்பும். சிறு திருட்டுக் குற்றத்தின் பேரில் அவர்களைக் கைது செய்த அம்மாநில போலீசு, குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்வதற்காக மிகவும் கேடு கெட்ட வெட்கக்கேடான முறையில் நடந்து கொண்டது. அவ்விளைஞர்களை நிர்வாணப்படுத்தி தாக்கி, ஒருவரின் ஆண் குறியை மற்றவரின் வாயினுள் வைத்துக் கொள்ளும்படி செய்து, இதனை அங்கிருந்த 12 போலீசாரும் ஐந்து நிமிடத்திற்கும் மேலாக ரசித்து மகிழ்ந்திருக்கின்றனர். போலீசு என்றாலே வக்கிரம் நிறைந்த மிருகங்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

## அமெரிக்கா சைவப் புலியா?

செயற்கைக் கோள் உதவியினை மட்டுமே கொண்டு குறி தப்பாது தாக்கக் கூடிய நவீன வகை குண்டுகளையும், போர்க்களத்தில் எதிரிப்படை வீரர்களைக் காயப்படுத்தாது கண்களை மட்டுமே குருடாக்கக் கூடிய ''லேசர்'' துப்பாக்கிகளையும் அமெரிக்கா தயாரித்திருக்கிறது. மேலும் ஈராக்கைத் தாக்கி அழித்ததைப் போன்ற நவீன மின்னணுவியல் போர்ச் சாதனங்களை வரும் பத்தாண்டுகளில் இன்னும் அதிக அளவில் தயாரித்துக் குவிப்பதற்கான திட்டமொன்றையும் அமெரிக்க காங்கிரசு அங்கீகரித்திருக்கிறது. ''பனிப்போர் சகாப்தம் முடிந்துவிட்டது; இனி அமைதி'' எனக் கூத்தாடியவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

## 'எய்ட்ஸ்' - இந்தியாவில் தமிழகம் முதலிடமா?

தமிழகத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் 14000பேர்ஆட்கொல்லிநோயான'எய்ட்ஸ்'-ஆல் இறந்து போவார்கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. கடந்த ஒரே ஆண்டில் மட்டும் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் பேருக்கு எய்ட்ஸ் நோய்க் கிருமியான ''எச்.ஐ.வி'' தாக்கியிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதுவரை கிட்டத்தட்ட நான்கு இலட்சத்துக்கும் அதிகமானோர் இந்நோய்க் கிருமியால் தாக்குண்டுள்ளனர். பெரு நகரங்களில் மட்டுமல்லாது தஞ்சை, திருவண்ணாமலை, நாகர்கோவில் போன்ற சிறு நகரங்களிலும் உட்புறக் கிராமப்புற பகுதிகளிலும் கூட இந்நோய் பரவி வருவதாக மருத்துவ பரிசோதனைகளின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

## மெக்சிகோ வழியில் இந்தியப் பொருளாதாரம்

# பாதாளத்தை நோக்கி பாய்ச்சல்

**திவாலான தென்னமெரிக்க நாடான மெக்சிகோவைப் போலவே இந்தியப் பொருளாதாரமும் அன்னிய மூலதனத்தாலேயே கட்டியமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் 800 கோடி டாலர் அளவுக்கு அன்னிய மூலதனம் இந்தியாவில் பாய்ந்துள்ளது.**

நாட்டை 21-ம் நூற்றாண்டுக்கு இழுத்துச் செல்வதாக மாய்மாலம் செய்த காங்கிரசு துரோகிகள், இப்போது இந்தியாவை மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளனர். இன்று இந்தியாவின் அந்நியக் கடன் 9178 கோடி டாலர். ஏறத்தாழ 2,84,518 கோடி ரூபாய். ஏழை நாடுகளிலேயே மிக அதிகமாகக் கடன் வாங்கி அதிலிருந்து மீள முடியாமல் சிக்கித் தவிக்கும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கிறது. கடந்த மாதத்தில் வெளியான உலக வங்கியின் கடன் பட்டியல் அறிக்கை இந்த உண்மையை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

கடன்கார நாடுகளில் முதலிடத்தை வகிப்பது, தென்னமெரிக்க நாடான பிரேசில். அதன் கடன் சுமை 13270 கோடி டாலர். அமெரிக்காவின் தெற்கேயுள்ள அதன் அண்டை நாடான மெக்சிகோ 1180 கோடி டாலர் கடன் சுமையுடன் இரண்டாவது நிலையில் உள்ளது. பூதாகரமான கடன் சுமையால் தத்தளித்த மெக்சிகோ, கடந்த டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட நெருக்கடியால் தனது பொருளாதாரத்தின் தலைவிதியை அமெரிக்க எஜமானர்களிடம் ஒப்படைத்துவிட்டு, திவாலாகி விட்டது. மெக்சிகோ, பாணியிலான பொருளாதாரத்தை கொண்டுள்ள இந்தியாவும் அத்தகையதொரு பேரழிவை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவை அடுத்துள்ள நவகாலனிய நாடான மெக்சிகோவின் பொருளாதாரம் '60-களிலிருந்தே உலக வங்கி — ஐ.எம்.எஃப்-ன் இரும்புப் பிடியில் சிக்கியுள்ளது. உலக வங்கியின் கட்டளைப்படியே பொருளாதார சீர்திருத்தங்களும், தாராளமயமாக்கலும், வரவு - செலவு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. உள்நாட்டின் விவசாய உற்பத்தி புறக்கணிக்கப்பட்டு, ஏகாதிபத்தியங்களின் தேவைக்கானபடி ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தி நிறுவப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் மெக்சிகோவின் பொருளாதாரம் அமெரிக்க டாலரால் கட்டி எழுப்பப்பட்டது.

ஏற்கனவே உலக வங்கியின் கடன் சுமையாலும், அன்னிய மூலதன ஆதிக்கத்தாலும் நிலை குலைந்து கிடந்த மெக்சிகோ, கடந்த ஆண்டில் வட அமெரிக்க சுதந்திர வர்த்தகக் கூட்டமைப்பில் (NAFTA) சேர்ந்ததும், அமெரிக்க டாலர் அந்நாட்டில் வெள்ளமெனப் பாய்ந்தது. அன்னிய மூலதனப் பெருக்கத்தாலும் தனியார் மயமாக்கலின் விளைவாகவும் மெக்சிகோவின் வங்கிகளையே கட்டுப்படுத்தும் அளவுக்கு ஏகாதிபத்தியங்கள் ஆதிக்கம் செலுத்தின. உள்நாட்டு முதலாளிகளும் சிறு உற்பத்தியாளர்களும் அன்னியத் தொழில் நிறுவனங்களுடன் போட்டியிட முடியாமல் நட்டப்பட்டு திவாலாகினர். இதைக் கண்டு பீதியடைந்த எஞ்சிய முதலாளிகள், தமது மூலதனத்துடன் நாட்டை விட்டே ஓடினர். இதனால் பங்குச் சந்தையில் திடீர் சரிவு ஏற்பட்டது. மெக்சிகோவின் நாணயமான ''பிசோ''வின் மதிப்பு 40%-க்கும் கீழே விழுந்து செல்லாக் காசாகியது. அதிர்ச்சியடைந்த நிதியமைச்சர் அவசரமாக அமெரிக்காவுக்குப் பறந்தார். கடைசி நேர முயற்சியாக அமெரிக்கா 600 கோடி டாலர் கடன் கொடுத்தது. கனடாவும் பிற ஏகாதிபத்தியங்களும் சேர்ந்து 900 கோடி டாலர் கடன் கொடுத்து மெக்சிகோவின் பொருளாதாரத்தை மீட்க முயன்றன. உலக வங்கி அதிகாரிகள் ஓடோடி வந்தனர். ஆனாலும் எதுவும் பலனளிக்கவில்லை. மஞ்சள் கடுதாசி கொடுத்துவிட்டு மெக்சிகோ திவாலாகியது.

மெக்சிகோவை முன் மாதிரியாகக் கொண்டு உலக வங்கியின் கட்டளைப்படி, அதே பாணியிலான புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டுள்ள நாடுதான் இந்தியா. கடன் பொறியில் சிக்கி மெக்சிகோவுக்கு அடுத்த நிலையில் நிற்கும் நாடுதான் இந்தியா. ஆனாலும் மெக்சிகோவைப் போன்ற அபாயம் ஏதும் ஏற்படாது என்று அமைச்சர்களும், காங்கிரசு ஆதரவு பொருளாதார நிபுணர்களும் பெருங் கூச்சல் போடுகிறார்கள்.

ஆனால் உண்மை நிலையோ அதற்கு மாறானது. பொருளாதார நிலைமையைப் புரிந்து கொள்ள புத்திசாலித்தனமும் உயர்கல்வியும் அவசியமில்லை. பாமரர்கள், பாட்டாளிகளின் வாழ்நிலையை கொஞ்சம் உரசிப் பார்த்தாலே போதும். பாசிச ராவ் கும்பல் பதவியேற்ற ஜூன் 1991-ல் அத்தியாவசியப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டு எண் 197.6 ஆக இருந்தது. இன்று அது 276.7 புள்ளியாக உயர்ந்து விலைவாசி விண்ணை முட்டுகிறது. 1991-ல் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளவர்களின் எண்ணிக்கையோ 28.18 கோடி. இன்று அது 35.47 கோடியாகப் பெருகி விட்டது. 1993-ல் 40% ஆக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1994-ல் 35.3% ஆகக் குறைந்து விட்டது. கடந்த 93-ஆம் ஆண்டில் 20% ஆக இருந்த ஏற்றுமதி வளர்ச்சி விகிதம் 1994-ல் 15% ஆகச் சுருங்கி விட்டது.

தொடர்ந்து அச்சுறுத்தி வந்த பணவீக்கம் இன்று இரட்டை இலக்கமாக உயர்ந்துவிட்டது. இரட்டை இலக்கப் பணவீக்கம் என்பது பொருளாதாரம் திவாலாகும் திசையில் செல்வதையும், பொருளாதாரத்தின் மீது தனது பிடியை அரசாங்கம் இழந்து விட்டதையும் காட்டுவதாகும் என்பது முதலாளித்துவ வாதிகளே ஒப்புக் கொள்ளும் உண்மை. இதுதவிர நிதிப் பற்றாக்குறையோ 65,000 கோடி ரூபாயிலிருந்து 98,000 கோடியாக அதிகரித்துவிட்டது. இவற்றின் விளைவாக ரூபாயின் மதிப்பு இனி செல்லாக் காசாகிவிடும்.

1989-90-ல் 7590 கோடி டாலராக இருந்த அன்னியக் கடன் நான்காண்டுகளில் 9178 கோடி டாலராக அதிகரித்து விட்டது. ரூபாயின் மதிப்பு தொடர்ந்து

### கடனை அடைக்க கடன் வாங்கும் புத்திசாலிகள்

நடப்பு நிதியாண்டில் முதல் எட்டு மாதங்களில் இந்திய அரசு 5028 கோடி ரூபாய் அன்னியக் கடனாகப் பெற்றது. இதில் 3523 கோடி ரூபாய் ஏற்கனவே வாங்கிய பழைய கடனை திருப்பிச் செலுத்துவதற்காகப் போய் விட்டது. இதுதவிர 2817 கோடி ரூபாய் வாங்கிய கடனுக்கு வட்டியாகப் போய்விட்டது. ஆக மொத்தம் ரூ. 6340 கோடி கடனாகவும் வட்டியாகவும் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. வேடிக்கை என்னவென்றால், வாங்கிய கடன் 5028 கோடி; திருப்பிச் செலுத்தியதோ 6340 கோடி. மொத்தத்தில் நட்டம் 1312 கோடி ரூபாய். இத்தொகையை உள்நாட்டுக் கடனிலிருந்து இந்திய அரசு கொடுத்துள்ளது. மொத்தத்தில் கடன் குறைய வில்லை. மாறாக, உயர்ந்து கொண்டே போகிறது. பழைய கடனை அடைக்க புதிய கடன், வட்டியைச் செலுத்த மீண்டும் புதிய கடன் என்று ஆண்டுதோறும் கோடிகோடியாய் கடன் சுமை அதிகரிக்கிறது. இதுதான் மன்மோகன் சிங்கின் புதிய பொருளாதாரக் கொள்கையின் லட்சணம்!



படிப்பகம்

www.padippakam.com

குறைக்கப்பட்டதன் விளைவாக, 1989-90-ஐ விட தற்போதைய கடன் அளவு 100% உயர்ந்து விட்டது. இது ஒருபுறமிருக்க, 1990-91-ல் 1,54,003 கோடி ரூபாயாக இருந்த உள்நாட்டுக் கடன் இன்று 2,42,728 கோடியாகப் பெருத்து விட்டது. சுருக்கமாகச் சொன்னால், இன்று பிறந்த குழந்தை உள்ளிட்டு ஒவ்வொரு இந்தியனின் தலையிலும் ரூ. 5850-க்கு கடன் சுமத்தப்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பாலான உழைக்கும் மக்கள் சிரமப்பட்டு ஈட்டும் ஆண்டு வருமானத்தைவிட இது அதிகமானதாகும்.

இந்நிலையில் மெக்சிகோவைப் போன்ற அபாயம் ஏற்படாது என்று ஆட்சியாளர்கள் குடுகுடுப்பைக் காரனைப் போல ஆருடம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால் மெக்சிகோ, இந்தியாவைப் போன்ற வறிய, பின்தங்கிய ஏழைநாடல்ல; நடுத்தர வருவாய் கொண்ட, இந்தியாவை விட வளர்ச்சி பெற்ற நாடு. இந்தியர்களை விட மெக்சிகோ மக்கள் சராசரியாக 5 மடங்கு வசதி படைத்தவர்கள். அந்த நாடே கடன் புதைசேற்றில் சிக்கித் திவாலாகி விட்டதென்றால், ஏழைநாடான இந்தியா எம் மாத்திரம்?

மெக்சிகோவைப் போலவே இந்தியப் பொருளாதாரமும் அன்னிய மூலதனத்தாலேயே கட்டியமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் 800 கோடி டாலர் அளவுக்கு அன்னிய மூலதனம் இந்தியாவில் பாய்ந்துள்ளது. கடந்த ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தியில், அன்னிய மூலதனம் மற்றும் கடன் அளவின் விகிதம் 37% ஆக உள்ளது. 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏறத்தாழ 90% திட்டங்கள் உள்நாட்டு உலக வங்கி கடன்களையும், அன்னிய மூலதனத்தையும் சார்ந்தே முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடன் கொடுத்த உலக வங்கி தனது இரும்புப் பிடியை இறுக்கினால் அதோகதிதான்!

மெக்சிகோவைப் போலின்றி இந்தியாவிடம் 20000 கோடி ரூபாய்க்கு அந்நியச் செலாவணி சேமிப்பு உள்ளதென்று ஆட்சியாளர்கள் பிரமையூட்டுகிறார்கள். ஆனால் இது 4.5 மாத இறக்குமதியை ஈடுகட்டுவதற்கே போதுமானது. அதன் பிறகு என்ன செய்வது என்பதுதான் கேள்வி.

மேலும் அந்நியக் கடன்களை ரூபாயாகத் திருப்பிச் செலுத்த முடியாது. டாலராகத் திருப்பிச் செலுத்த அந்நியச் செலாவணி சேமிப்பு தேவை. இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைவாக இருந்தால்தான் இது சாத்தியம். ஆனால் மெக்சிகோ பாணியிலான புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக நிலைமை தலைகீழாகவே உள்ளது.

இதுதவிர, நடப்பு ஆண்டில் பருத்தி, பருப்பு, எண்ணெய் வித்துக்கள் முதலான அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக, பருப்பு மட்டும் 20 லட்சம் டன் அளவுக்கு பற்றாக் குறையாக உள்ளது. உலக வர்த்தகக் கழகத்தில் சேர்ந்துள்ள இந்தியா, பற்றாக்குறை பருப்பை சர்வதேச விலைக்கு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. ஆனால் உலகெங்கும் பருப்பு விளைச்சல் இவ்வாண்டு குறைந்து விலை அதிகரித்துவிட்டது. கூடுதல் விலை கொடுத்து உணவு தானியங்களை இறக்குமதி செய்தால் அந்நியச் செலாவணி சேமிப்பு ஒரே மாதத்தில் காலியாகி விடும். அப்புறம் மெக்சிகோ நிலைமை தான்!

ஏற்கனவே ஆந்திர-கர்நாடகத் தேர்தல்களில் காங்கிரசு படுதோல்வியடைந்ததும் பம்பாய் பங்குச் சந்தையில் திடீர் சரிவு ஏற்பட்டது. அடுத்து வரும் நான்கு மாநிலத் தேர்தல்களில் காங்கிரசு மண்ணைக் கவ்வினால், நிலைமை விபரீதமாகிவிடும் என்று ஆளும் வர்க்கப் பொருளாதாரவாதிகளே எச்சரிக்கின்றனர். தென்னமெரிக்கா நாடுகளின் வரிசையில் இந்தியாவும் தனது தலைவிதியை ஏகாதிபத்திய எஜமானர்களிடம் ஒப்படைத்து விட்டு இன்னுமொரு வாழைப்பழ குடியரசாக மாறிவிடும்!'

இந்தப் பேரபாயத்தை முறியடிக்க வழிதான் என்ன? இதற்கும் மெக்சிகோ முன்னுதாரணமாக நிற்கிறது. மெக்சிகோ ஆட்சியாளர்கள் திணித்த பொருளாதாரச் சுமைகளை அந்நாட்டு மக்கள் மௌனமாக ஏற்றுக் கொண்டு விடவில்லை. நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்து திவாலாக்கிய மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு எதிராக அந்நாட்டு விவசாயிகளும் உழைக்கும் மக்களும் போர்க்கோலம் பூண்டார்கள். குறிப்பாக மெக்சிகோவின் தென்பகுதியிலுள்ள சியாபாஸ் பிராந்தியத்தைச் சேர்ந்த விவசாயிகள் நிலத்திற்காகவும் அரசியல் அதிகாரத்திற்காகவும் ஆயுதமேந்திப் போராடி வருகிறார்கள்.

மெக்சிகோ அரசுப் படைகளுக்கும் விவசாயப் புரட்சிப் போராளிகளுக்குமிடையே போர் தொடர்ந்து நீடிக்கிறது.




சுருக்கமாகச் சொன்னால், உலக வங்கியின் கட்டளைகளைத் தீவிரமாக நடைமுறைப் படுத்தியும் கூட காங்கிரசு துரோகிகளால் பொருளாதார சக்கரத்தை முன்னோக்கி நகர்த்த முடியவில்லை. பணவீக்கப் பெருக்கம், செல்லாக் காசாகிவிட்ட ரூபாய், ஒட்டு மொத்த வளர்ச்சிவிகித வீழ்ச்சி, பற்றாக்குறை அதிகரிப்பு, பூதாகரமான கடன்சுமை, அந்நியச் செலாவணி கையிருப்புக்கும் ஏற்றுமதி வர்த்தகத்துக்குமிடையே மிகப் பெரிய பாதாளம், அரசாங்க ஊதாரிச் செலவுகள் அதிகரிப்பு முதலானவற்றால் இந்தியா திவாலாகும் விளிம்பில் நிற்கிறது. ஏற்கனவே ஏகாதிபத்தியங்களின் இரும்புப் பிடியில் சிக்கியுள்ள இந்தியா, பொருளாதார ரீதியில் திவாலாகி விட்டால், ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக மாற்றப்படும். 500-க்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்தும் கிராமங்களைத் தரைமட்டமாக்கியும் கூட விவசாயிகளின் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. இன்று ''சாபடிஸ்டா'' விவசாயப்புரட்சி இயக்கத்தினர் 38 பிராந்தியங்களில் தமது தளப் பிரதேசத்தை நிறுவி புரட்சிப்போரில் முன்னேறி வருகின்றனர்.

இந்தியாவின் கோடானுகோடி உழைக்கும் மக்களின் முன்னுள்ள கேள்வி இதுதான்: மெக்சிகோ பாணியில் நாட்டைத் திவாலாக்கத் துடிக்கும் காங்கிரசுத் துரோகிகளின் மக்கள் விரோதக் கொள்கைகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா? அல்லது மெக்சிகோ விவசாயிகளை முன்னுதாரணமாகக் கொண்டு புரட்சிப் போரில் இறங்கப் போகிறீர்களா?

● பாலன்

www.padippakam.com

# பரிசுச் சீட்டு மோகம் குபேரனாக்கவில்லை குப்புறத் தள்ளுகிறது

● **கோ**விந்தராசு சென்னையைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்; ஓரளவு வருமானம், மனைவி, குழந்தைகள், குடும்பம் என மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருந்த அவரது வாழ்க்கை, ஒற்றை எண் பரிசுச் சீட்டு மோகத்தால் இன்று பழங்கதையாகிப் போனது. சொந்த ஆட்டோவை விற்றும் பட்ட கடனை அடைக்க முடியவில்லை; திரும்பத் திரும்பச் சொல்லியும் திருந்தாததால் அவரது மனைவி பிறந்த வீட்டிற்குச் சென்று விட்டார். அநாதரவான இந்த நிலையிலும் தனது அதிர்ஷ்டத்தைப் பரிசுச் சீட்டுக் கடைகளில் பரிசோதித்துக் கொண்டிருக்கிறார் கோவிந்தராசு.

● **டெ**ல்லியைச் சேர்ந்த விஜயன் தனது மாத வருமானம், மனைவியின் நகைகள், வீட்டுச் சாமான்கள், சொந்த ஆட்டோ எல்லாவற்றையும் விற்று பரிசுச் சீட்டுகளை மலையாக வாங்கி குவித்த பின்னும் கூட, 'அதிர்ஷ்ட தேவதை' அவரைக் கண் திறந்து பார்க்கவில்லை. இனி வரும் இருண்ட காலத்தை எப்படிச் சமாளிப்பது எனப் பயந்து போனார், அவர். தனது வீட்டிலேயே அம்மா- மனைவியின் கண் முன்னாலேயே உடலெங்கும் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தீ வைத்துக் கொண்டார்.

● **தா**ன் கஷ்டப்பட்டு சம்பாதித்து வரும் பணத்தைத் தனது அண்ணன்மார்கள் ஊதாரித்தனமாக பரிசுச் சீட்டுக்களில் செலவழிப்பதால் மனம் நொடிந்து போனாள் மீனா. இந்த நரக வேதனையைவிட தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்வது அவருக்குப் பெரிதாகப்படவில்லை.

● **க**ர்நாடகாவைச் சேர்ந்த சீனிவாசனும் டெல்லியைச் சேர்ந்த அனில் குமாரும், சோகன்லாலும் பரிசுச் சீட்டு மோகத்தில் மீள முடியாத கடனாளியாகி தற்கொலை செய்து கொண்டார்கள். கோவிந்தன், அனுமான், பிரகாஷ், கமலேஷ் - இவர்களெல்லாம் சொத்துக்களை மாத வருமானத்தை இழந்து ஓட்டாண்டிகளாகிப் போனவர்கள்.

இப்படி பார்த்தீனியமாகப் பரவி வரும் பரிசுச்சீட்டு மோகத்தால் வாழ்விழந்தவர்களை, சுற்றத்தார்களைக் கதற விட்டு வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்களை இந்தியாவெங்கும் நூற்றுக்கணக்கில் — ஆயிரக்கணக்கில் கூட காணலாம்.

''விழுந்தால் வீட்டுக்கு; இல்லையென்றால் நாட்டுக்கு'' என இச்சூதாட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள் ஆட்சியாளர்கள். ஆனால் இன்று இம்மோசடித் தொழில் முழுக்கவும் தனியார்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிட்டது. சமூக நல அமைப்புகள் பெயரில் பரிசுச் சீட்டுக்களைத் தொடங்கி நடத்துவது இன்று மிகவும் எளிதானது. இதற்காகக் குறிப்பிட்ட தொகையினை ''ராயல்டி''யாகப் பெற்றுக் கொள்கின்றன மத்திய - மாநில அரசுகள்.

மாதாந்திர குலுக்கல் எனத் தொடங்கிய இச்சூதாட்டம், வாராந்திரம் — தினக் குலுக்கல் என வளர்ந்து இன்று மணிக்கொரு குலுக்கல் என்று அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. இவற்றிலும் இப்பொழுது கிராக்கியெல்லாம் உடனடிப் பரிசுச் சீட்டுக்கும் (சுரண்டும் லாட்டரி) ஒற்றை எண் பரிசுச் சீட்டுக்கும் தான். ஒரே நாளில் காலையில் பத்து மணி தொடங்கி மாலையில் ஐந்து மணிக்குள் ஒற்றை எண் பரிசுச்சீட்டுக்கான ஐந்து குலுக்கல்கள் நடைபெற்று முடிந்து விடுகின்றன.

ஒற்றை எண் பரிசுச்சீட்டு ஒன்றின் விலை இரண்டு ரூபாய் தொடங்கி முன்னூறு ரூபாய் வரையும் உண்டு. விலைக்குத் தகுந்தவாறு பரிசுத் தொகையும் அதிகரிக்கும். பத்து சீட்டு வாங்குபவர்களுக்கு நிச்சயம் ஒரு பரிசு உண்டு என்பதால், பிற வகையான பரிசுச்சீட்டு வாங்கி வருபவர்களையும் தன் பக்கம் கவர்ந்து இழுத்து விடுகிறது, இது.

கைகளில் குதிரைப் பந்தயப் புத்தகங்களை வைத்துக் கொண்டு இந்தக் குதிரைதான் வெல்லும் என அனுமானித்துச் சொல்வதைப் போல, இந்த எண்ணுக்குத் தான் பரிசு விழும் எனக் கணக்குப் போட்டுச் சொல்லும் 'ஆலோசகர்' கூட்டமும் பெருத்துப் போயிருப்பதை இப்பரிசுச் சீட்டு விற்கப்படும் கடையோரங்களில் காண முடியும்.

வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் என்பார்கள். பரிசுச்சீட்டு விற்பனையில் எதனையும் புறந்தள்ளாது இக்கூற்றைத் தொடர்ந்து மெய்ப்பித்து வருகிறது நமது தமிழகம். அழகுப்படுத்தப்பட்ட கடைகளில் மட்டும்தான் என்றில்லாது நடைபாதை ஓரங்களில் பேருந்துகளில், முக்கிய நகர வீதிகளில், உதிரித் தொழிலாளர்கள் கூடும் மையங்களில் என பரிசுச்சீட்டு விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. அதிர்ஷ்டத்தை அள்ளித் தருவதற்காகவே பல வெளியூர் ஏஜெண்டுகள் ஊர் ஊராகச் சென்று ''டாக்ஸி''களில்,''ஆட்டோ''களில் விற்பனை நடத்தி வருவதை அடிக்கடி காண முடியும்.

தமிழகத்தில் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் 90 விதமான ஒற்றை எண் பரிசுச் சீட்டுக்கள் விற்பனையாகி வருகின்றன. ''குஷ்பு டீலக்ஸ்'', ''ஜாக்பாட் சூப்பர்'' — இப்படி கவர்ச்சிகரமான பெயர்கள் இவற்றுக்கு உண்டு. தமிழகத்தில் ஒரு ஆண்டில் இதனின் விற்பனை 140 கோடி ரூபாயைத் தொடுகிறது. அதே சமயம் அரசு நடத்தி வரும் பரிசுச் சீட்டுக்கள் 10 கோடி ரூபாய் அளவிற்குத்தான் விற்பனையாகின்றன. இதிலிருந்தே ஒற்றை எண் பரிசுச் சீட்டின் மோகத்தைப்




படிப்பகம்

www.padippakam.com




**மாதாந்திர குலுக்கல் எனத் தொடங்கிய இச்சூதாட்டம், வாராந்திரம், தின குலுக்கல் என வளர்ந்து இன்று மணிக்கொரு குலுக்கல் என்று அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கிற**

புரிந்து கொள்ள முடியும். இது தவிர, ஒரே நாளில் 25-க்கும் அதிகமான வாராந்திர பரிசுச்சீட்டு முடிவுகளும் வெளியாகின்றன.

பரிசுச் சீட்டு மோகத்தில் தமிழ்நாட்டுக்கு இணையாக தலைநகர் தில்லியைக் குறிப்பிடலாம். இங்கு ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 2000 கோடி ரூபாய் பெறுமான பரிசுச்சீட்டுக்கள் விற்பனையாவதாகவும் 300 விதமான பரிசுச்சீட்டுக்கள் புழக்கத்தில் உள்ளதாகவும் கணக்கிடப்படுகிறது. இம்மோகத்தால் நடுத்தர மற்றும் அடித்தட்டு பிரிவைச் சேர்ந்தவர்கள் நொடித்துப் போய் தற்கொலை செய்து கொள்வதும் தற்பொழுது அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. இதனால் எழுந்து வரும் எதிர்ப்பின் காரணமாக தில்லி மாநில அரசாங்கம் ஒற்றை எண் பரிசுச் சீட்டுக்களைத் தடை செய்ய முடிவு செய்திருப்பதோடு, பரிசுச்சீட்டு விற்கும் இடங்களில் ஐந்து நபர்களுக்கு மேல் கூடி நிற்கக் கூடாது எனவும் உத்தரவிட்டுள்ளது.

ஆனாலும் ஒரு மாநிலத்தில் பரிசுச் சீட்டு விற்பனையைத் தடை செய்வதன் மூலம் மட்டுமே, இச்சூதாட்டத்தைக் கட்டுப்படுத்திவிட முடியும் என எண்ணுவது பகற்கனவாகும். தில்லியில் சில குறிப்பிட்ட பரிசுச்சீட்டுக்கள் விற்பனை தடை செய்யப்பட்ட பின், எல்லைப் பகுதிகளைத் தாண்டி குடித்துவிட்டு வருவதைப் போல அதன் எல்லையையொட்டி அமைந்துள்ள பிற மாநிலப் பகுதிகளில் அவற்றின் விற்பனை அதிகரித்தது.

இது தவிர கள்ளச் சாராயம் போல, பம்பாய், தில்லி, கல்கத்தா நகரங்களை மையமாக வைத்து நடைபெற்று வரும் ''சத்தா'' எனப்படும் ஒருவகை சட்ட விரோத சூதாட்ட வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெறத் தொடங்கியிருக்கிறது. தகவல் தொடர்புத் துறையில் ஏற்பட்டு வரும் புரட்சியின் காரணமாக இச் சூதாட்டத்தில் ''இந்தியாவில் எந்தவொரு மூலையில் உள்ளவரும் கலந்து கொள்ள முடியும்'' என பரிசுச்சீட்டு விற்பனை எதிர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

● தமிழ்நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சி சங்கராச்சாரியார்களின் அருளாசியோடு சங்கரா எனும் பரிசுச் சீட்டு விற்பன்னைக்கு வந்தது; பின்னர் அது மோசடி எனக் கண்டுபிடிக்கப்பட்டு தடை செய்யப்பட்டது.

● அர்ஜுன் சிங் ம.பி. மாநில முதல்வராக இருந்த பொழுது, அவரது மகன் குழந்தைகள் நலனுக்காக ''சுராத்'' என்ற பரிசுச்சீட்டினைத் தொடங்கினார். அரசிடம் ஒரேயொரு குலுக்கலுக்கு அனுமதி பெற்றுவிட்டு, பன்னிரெண்டு குலுக்கல்களைத் தானாகவே நடத்திக் கொண்டார்.

● பஞ்சாப் அரசின் அனுமதி பெற்ற ''மட்கா மோஷன் கா'' எனும் பரிசுச்சீட்டின் குலுக்கல் 166 முறை நடைபெற்று முடிந்துள்ளது; ஆனால் இதுவரை இருவருக்குத்தான் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

● குமார் சேத் என்ற பரிசுச் சீட்டு முதலாளி, தான் நடத்தி வரும் இரு பரிசுச் சீட்டுகளின் குலுக்கல் முடிவுகளை மாற்றி வெளியிட்டு 2.5 கோடி ரூபாய்க்கும் அதிகமாக மோசடி செய்துள்ளார். இவையெல்லாம் மோசடிக்குள் எப்படி மோசடி

## நவீன சூதாட்டங்கள்

நண்பர்கள் தங்களிடையே விளையாட்டாகப் பந்தயம் கட்டிக் கொள்வதைப் பார்த்திருப்போம். இதனையே ஆயிரக்கணக்கானோர் குறிப்பிட்ட முக்கிய நிகழ்வுகளின் மீது பந்தயம் கட்டி சூதாடுவதுதான் ''சத்தா'' எனப்படும் சூதாட்டம். பங்குச் சந்தை நிலவரம், கிரிக்கெட் போட்டி, தேர்தல் முடிவுகள் போன்றவை மீதெல்லாம் பந்தயம் கட்டப்படும். இதனை ஒழுங்கு செய்யும் ஏஜெண்டுகள், முடிவுகளை நாட்டின் பிற பகுதிகளுக்கும் தொலைபேசி மூலம் தெரிவித்து விடுவார்கள். வென்றவர்களுக்கு பரிசுத் தொகை 60 மடங்கு, 160 மடங்கு எனக் கிட்டும் வாய்ப்புண்டு. பெரிய விபத்துக்கள் நடந்தால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மீதுகூட பந்தயம் கட்டிச் சூதாடுவார்கள். எப்படியான வக்கிரம் பாருங்கள்.

www.padippakam.com




...ா பரிசுச் சீட்டைத் தடை செய்யக் கோரி டெல்லியில் குழந்தைகள் நடத்திய ஆர்ப்பாட்டம்

நடைபெற்றுள்ளது என்பதற்கான உதாரணங்கள்.

அரசிடம் இவ்வளவு எண்ணிக்கையில் பரிசுச்சீட்டு அச்சிட்டு வெளியிடுகிறோம் என உறுதியளித்துவிட்டு பத்தில் ஒரு பாகம் மட்டுமே அச்சிட்டு வெளியிடுவது; போலி பரிசுச்சீட்டுக்களை வெளியிட்டுப் பரிசுத் தொகையைக் கொடுக்க மறுப்பது; பரிசு விழுந்தவர் வைத்துள்ள சீட்டு போலியானது என மிரட்டுவது; குலுக்கல் நடைபெறும்பொழுது விற்பனையாகாத சீட்டுக்குப் பரிசு விழும்படி முறைகேடுகள் செய்வது; கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றுவது - இவையாவும் பரிசுச்சீட்டினைத் தொடங்கி நடத்துபவர்கள் மோசடி செய்வதற்காகக் கையாளும் வழமையான வழிமுறைகள்.

1982-ல் பம்பாய், பெங்களூர் நகரங்களிலும் குஜராத் மாநிலத்திலும் எடுத்த புள்ளிவிவரங்களின்படி பரிசுச்சீட்டு வாங்குபவர்களில் கிட்டத்தட்ட 80 சதவீதத்தினர் 1000 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உடையவர்கள். வாங்கும் சம்பளம் வாய்க்கும் வயிற்றுக்குமே பத்தாத போது, அரசே சட்டபூர்வமாக அனுமதித்துவரும் இப்பரிசுச்சீட்டு விற்பனை, அதிகப்பணமும் உழைப்பும் தேவையின்றி, 'அதிர்ஷ்டமிருந்தால்' எளிதாகப் பணம் சம்பாதித்துவிடும் வழியாக இவர்களுக்குத் தோன்றுகிறது.

முதல் பரிசுகளும், ''பம்பர்'' பரிசுகளும்தான் என்றில்லை, சிறு சிறு பரிசுகள் கூட பரிசுச்சீட்டு மோகமுள்ளவர்களைக் கவர்ந்திழுக்கும் பொறிகளாக உள்ளன. உதாரணமாக இரண்டு ரூபாய் முதல் இருநூறு ரூபாய் வரை செலவு செய்து பரிசுச்சீட்டு வாங்கும் ஒருவருக்கு 17 ரூபாய் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை பரிசு விழ வாய்ப்புள்ளதாக விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இதனால் ஒரே சமயத்தில் பத்து, இருபது என சீட்டுக்கள் வாங்குவோர்களை எங்கும் கான முடியும். குறைந்த பட்சமாக பரிசுத்தொகை விழுந்துவிட்டாலோ தங்கள் பாக்கெட்டையே காலி செய்துவிட்டு வீட்டுக்குப் போகுமளவு மயங்கிப் போயிருக்கிறார்கள், இவர்கள்.

பரிசுச்சீட்டுக்கு அடிமையாகிப் போனவர்களை போதை மருந்துக்கு அடியானவர்களுடன் ஒப்பிடுகிறார்கள், மனோதத்துவ நிபுணர்கள். இவர்களை சிகிச்சையினால் மட்டும் குணப்படுத்திவிட முடியாதென்றும், பரிசுச்சீட்டு விற்பனையைத் தடைசெய்வது பிரதானமானதென்றும் குறிப்பிடுகிறார்கள், அறிஞர்கள்.

முறைகேடுகளும் மோசடிகளும் நிறைந்து அடித்தட்டு மக்களின் வாழ்க்கையைப் பறித்துவரும் இத்தொழிலை அரசு நாடு முழுவதும் தடை செய்வது ஒருபுறமிருக்கட்டும்; குறைந்தபட்சம் மோசடி செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கும்படியாகக் கூட இப்பொழுதுள்ள சட்டத்தில் மாற்றங்களைச் செய்யத் தயாராயில்லை. பரிசுச்சீட்டு விற்பனையின் மூலம் மைய மாநில அரசுகளுக்கு கிடைத்துவரும் 20,000 கோடி ரூபாய் வருமானத்தை அவை இழந்துவிட விரும்பவில்லை என்பது தான் இதன் காரணமாகும்.

இதோடு அரசியல்வாதிகளின் பினாமிகளுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் இது செல்வம் கொட்டும் தொழிலாகவும் இருந்து வருகிறது; மேலும் இம்மோசடிப் பேர்வழிகள் ஒட்டுக்கட்சி அரசியல்வாதிகளுக்குச் சன்மானங்களை வாரி வழங்கி, அதற்க ஈடாக எம்.பி., எம்.எல்.ஏ., போன்ற பதவிகளைக் கூடப் பெற்றுவிடுகிறார்கள். இதனால் எல்லாவிதமான பரிசுச்சீட்டுக்களையும் நாடு முழுவதும் மைய - மாநில அரசுகள் தானாகவே தடை செய்துவிடும் என எதிர்பார்க்க முடியாது.

சாராய விற்பனைக்கு எதிராக ஆந்திரா, குஜராத் போன்ற மாநிலங்களில் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடியதைப் போல, இச்சூதிற்கு எதிராகவும் போராட வேண்டும்; இவ்விழிப்புணர்வுதான் அரசினை நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்குவதோடு, இது போன்ற சீரழிவு பழக்கங்களில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் சூழலை ஏற்படுத்தும்.

● ரஹீம்

## பாடத்திட்டத்திலும் சாதிவெறி

கடந்த இரு மாதங்களுக்கு முன்பு சென்னையில் உள்ள சைதை உட்கோட்டத்தைச் சேர்ந்த பள்ளிகளுக்கான அரையாண்டு தேர்வு நடந்தது; இதில் எட்டாம் வகுப்பிற்கான பொது அறிவியல் வினாத்தாளில் பொருத்துக என்ற விளாப்பிரிவில் தீண்டத்தகாதவர்கள் என்பதுடன் பொருத்துவதற்காக அரிசனங்கள் என்ற பதில் தரப்பட்டிருந்தது. இது நேரடியாகவே இளம் மாணவர்கள் மத்தியில் தீண்டாமையைத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளதால் மீஞ்சூர் மற்றும் பொன்னேரி பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இதனை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கினர். அரசு அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம், சாலை மறியல் எனப் போராட்டம் தீவிரமடைந்தது. சாலை மறியலில் மாணவர்களோடு ஈடுபட்ட மீஞ்சூர் பொதுமக்களை போலீசு கைது செய்தது.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஆதரவாக சென்னை தியாகராயர் கல்லூரி மாணவர்களும் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதன்பின் சுதாரித்துக் கொண்ட ஜெயா அரசு வினாத்தாளைத் தயாரித்த ஆசிரியரைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தது. ஆனால் அரசே வெளியிட்டுள்ள எட்டாம் வகுப்பிற்கான சமூக அறிவியல் பாடத்திட்டத்தில் தீண்டாமையைத் தூண்டும் வண்ணம் ''தீண்டத்தகாதவர்கள் யார்?'' என்ற வினா எழுப்பப்பட்டுள்ளது. ஆசிரியரைத் தண்டித்து தப்பிக்கப் பார்க்கும் இந்தக் கபட அரசை யார் தண்டிப்பது?

www.padippakam.com

# பருத்தி நூல் விலையேற்றம்: நெசவாளர்களுக்குப் பேரிடி

பாசிச ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையின் விளைவாக 1991-ம் ஆண்டின் இறுதியில் ஆந்திராவைச் சேர்ந்த 73 நெசவாளர்கள் பட்டினியும் கடன் சுமையும் தாளாமல் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்கள். இன்று, ராஜீவின் வழியில் நாட்டை மறு அடகு வைத்து வரும் ராவ் கும்பலின் ஆட்சியில் நாடு முழுவதும் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட நெசவாளர்கள் வேலையிழந்து பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக இருப்பது நெசவுத் தொழில். தமிழகத்தில் மட்டும் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட கைத்தறி, விசைத்தறி, பனியன் பின்னலாடைத் தொழிலாளிகளும், சிறு முதலாளிகளும் இத்தொழிலைச் சார்ந்துள்ளனர். ஆயினும், ராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இன்று இத்தொழில் அழிவு நிலையை எட்டி விட்டது. கடந்த ஈராண்டுகளாகத் தொடர்ந்து அதிகரித்து வந்த நூல் விலையானது, இப்போது "பேல்" ஒன்றுக்கு முப்பதாயிரம் ரூபாயாக உயர்ந்து விட்டது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 120%-ம், கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 30%-ம் தாறுமாறாக விலை உயர்ந்துள்ளது.

நூல் விலையேற்றத்தின் விளைவாக திருப்பூர், மதுரை, கரூர், கொமாரபாளையம், பள்ளிப்பாளையம் முதலான பகுதிகளில் பல லட்சம் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கின்றனர். திருப்பூரில் பனியன் பின்னலாடைத் தொழிலாளர்கள் ஒரு லட்சம் பேரும், பனியன் தொழிலைச் சார்ந்துள்ள டையிங், பிளீச்சிங், ஸ்டீம் காலண்டரிங் முதலான தொழில்களில் ஈடுபட்டுள்ள நாற்பதாயிரம் பேரும் இன்று வேலையின்றி வாடுகின்றனர். இதேபோல ஆந்திராவின் சிராலா, மங்களகிரி பகுதியில் 48,000-க்கும் மேற்பட்ட விசைத்தறிகளில் பாதிக்கும் மேற்பட்டவை மூடிக்கிடக்கின்றன. வறுமை காரணமாக தமிழக நெசவாளர்கள் தமது சிறுநீரகத்தை விற்கும் அவலம் தொடர்கிறது.

நூலிழை விலையேற்றத்துக்குத் தட்டுப்பாடே முதற் காரணமாக உள்ளது. ஆண்டுக்கு 275 நாட்களுக்கு கைத்தறி நெசவாளர்கள் வேலை செய்ய குறைந்த பட்சம் 45 கோடி கிலோ நூலிழை தேவை. ஆனால் 30 கோடி கிலோ நூல் தான் கிடைக்கிறது. பருத்தி உற்பத்திச் செலவு பலமடங்கு அதிகரித்துவிட்ட நிலையில், அதற்கேற்ற லாபம் கிடைக்காததால் விவசாயிகள் படிப்படியாக பருத்தி பயிரிடுவதையே குறைத்து வருகின்றனர். 1950-ம் ஆண்டில் 3.45 லட்சம் ஹெக்டேராக இருந்த பருத்தி விளை நிலப்பரப்பு இன்று 2.25 லட்சம் ஹெக்டேராக சுருங்கிப் போய்விட்டது.

இரண்டாவதாக, புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்ததும் பருத்தியும் நூலிழையும் வரைமுறையின்றி ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் தட்டுப்பாடும் பதுக்கலும் பெருகி நூல் விலை வேகமாக உயர்ந்து கொண்டே போகிறது. உள்நாட்டிலேயே தட்டுப்பாடு நிலவும்போது, கடந்த அக்டோபர் - நவம்பர் மாதங்களில் மட்டும் 3 கோடி கிலோ தரமான பருத்தி நூல் தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது; மூன்று மாதங்களுக்கு முன்பு ஆந்திராவிலுள்ள 280-க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் 21 கோடி கிலோ நூலை ஏற்றுமதி செய்துள்ளன. இத்தனையும் போதாதென்று கடந்த மூன்றாண்டுகளாக பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும் உணவு தானியங்களையும் பருத்தியையும் நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தாராள அனுமதியும் சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது. இப்படி வரைமுறையின்றி ஏற்றுமதி செய்யப்படுவதால், தட்டுப்பாடு அதிகரித்து நூல் விலை தாறுமாறாக உயர்ந்து வரலாறு காணாத நெருக்கடிக்குள் ஜவுளித் துறை சிக்கிக் கொண்டுள்ளது.



எல்லாவற்றுக்கும் மேலாக, தற்போது "காட்" ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளதால், இந்நெருக்கடியிலிருந்து இனி மீண்டெழ வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. "காட்" ஒப்பந்தப்படி, 10 ஆண்டுகளுக்குள் ஜவுளித் துறையில் உள்ள கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டு, மேலை நாடுகளின் கட்டளைக்கேற்ப அற்ப விலைக்கு இந்தியா ஏற்றுமதி செய்ய வேண்டும். அந்நாடுகள் தீர்மானிக்கும் விலைக்குத்தான் இந்தியா நூலிழைகளை இறக்குமதி செய்ய முடியும். மேலும், ஏகாதிபத்தியங்கள் தமது நாட்டுத் துணிகளை இந்தியாவில் 'மலிவு' விலைக்கு விற்பதையும் தடுக்க முடியாது. வெள்ளைக்காரன் நமது நாட்டை ஆண்டபோது இங்கிருந்து பருத்தியை மான்செஸ்டருக்கு ஏற்றுமதி செய்து, அங்கிருந்து ஆடைகளை இறக்குமதி செய்ததைப் போலவே, தற்போதைய "காட்" ஒப்பந்தத்தின் மூலம் நாட்டை மறுகாலனியாக்கும் பாதையில் காங்கிரசு துரோகிகள் இழுத்துச் செல்கின்றனர்.

இதன் விளைவாக, கோடானு கோடி விவசாயிகளைப் போலவே நெசவாளர்களும் தமது வாழ்வை இழந்து பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பருத்தி - நூலிழை ஏற்றுமதியைத் தடுக்க வக்கற்ற அரசு, பதுக்கல்தான் காரணம் என்று பருத்தி அரவை ஆலைகளில் 100 குவிண்டாலுக்கு அதிகமாக இருப்பு கூடாது என்று கோமாளித்தனமாக கெடுபிடி செய்ததன் விளைவாக, ஜின்னிங், பிரஸ்ஸிங் நிறுவனங்களும், பருத்தி வியாபாரிகளும், பருத்தியை கொள்முதல் செய்வதில்லை என்று போராட்டத்தில் இறங்கியதால் நெருக்கடி மேலும் முற்றிவிட்டது. நெசவாளர்களும், சிறு முதலாளிகளும் வியாபாரிகளும் தன்னெழுச்சியான போராட்டங்களில் இறங்கியதும் கொள்முதல் உச்சவரம்பைத் தளர்த்தியும், சில கண்துடைப்பு நடவடிக்கையும் வெற்று வாக்குறுதிகளையும் மத்திய அரசு அறிவித்துள்ளதே தவிர, நெசவுத் தொழிலைப் பாதுகாக்கவோ வளர்க்கவோ எவ்வித உத்திரவாதமும் தரவில்லை. பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான நெசவாளர்களுக்கு நிவாரண உதவிகூட இல்லை

எதிர்க்கட்சிகளோ, நெசவாளர்கள் போராடத் தொடங்கியதும் அரசியல் ஆதாயம் கருதி ஆதரிக்கின்றனவே தவிர, இந்நெருக்கடிக்குக் காரணமான "காட்" ஒப்பந்தத்தை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடுவதற்கான திட்டமோ, கொள்கையோ அவர்களிடம் கிடையாது. வேறொரு பிரச்சினை முன்னணிக்கு வந்ததும் இதைக் கிடப்பில் போட்டுவிட்டு ஓடிவிடுவதே அவர்களின் வாடிக்கையாக உள்ளது. எனவே, இத்தகைய ஓட்டுக்கட்சிகளைப் புறக்கணித்து காங்கிரசு துரோகிகளுக்கும் அவர்களது எஜமானர்களுக்கும் எதிராகப் புரட்சிகர தலைமையின் கீழ் நெசவாளர்கள் கிளர்ந்தெழ வேண்டும். நூல் விலையேற்றத்துக்கு எதிரான போராட்டத்தை ஏகாதிபத்திய "காட்" ஒப்பந்தத்துக்கு எதிரான போராட்டமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# இளைத்தவனை பெருத்தவன் ஏளனம் செய்வதா?

**மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு எதிராக பல முனைத் தாக்குதல்கள் நடத்தும்படி மேலை நாடுகளும் அவற்றின் நிதி நிறுவனங்களும் ஏழை நாடுகளை நிர்ப்பந்திக்கின்றன.**

பேருந்துகளில், இரயில்களில், கடைவீதிகளில், சினிமா கொட்டகைகளில், மருத்துவமனைகளில் மக்கள் நெரிசல் அதிகமாகிவிடும் போதெல்லாம் ''எல்லாம் ஜனம் பெருத்துப் போச்சு; அதுதான் இப்படி'' என்று பலரும் அலுத்துக் கொள்வதைக் கேட்கிறோம். விலைவாசி ஏற்றமோ, குடிதண்ணீர் தட்டுப்பாடோ, வேலையில்லாத் திண்டாட்டமோ, பள்ளி - கல்லூரிகளில் இடமில்லாமல் போனாலோ இதே காரணத்தைச் சொல்லுகிறார்கள். ஏன், பூகம்பம், புயல், மழை, வெள்ளம், பெரும் விபத்து என்று நேர்ந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் மாண்டுபோனால்கூட ''இப்படியாவது ஜனத்தொகை குறையட்டும்'' என கொஞ்சம் கூட மனிதத் தன்மை இல்லாமல் சபிப்பதையும் கேட்கிறோம்.

இவர்களில் பலர் கண்ணால் காண்பதையோ, காதால் கேட்பதையோ மட்டும் முழு உண்மை என்று முடிவு செய்து விடுகிறார்கள். தீரப் பரிசீலனை செய்து சரியான கருத்துக்கு வருவதில்லை. முக்கியமாக சமூகப் பொருளாதார ஏற்ற தாழ்வுகளும், மூலாதாரங்களை மக்களுக்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்தத் தவறுவதும், திட்டமிடுதலில் முன்னுரிமைகளைச் சரியாகத் தீர்மானிக்கத் தவறுவதும்தான் மக்கள் தொகை பெருக்கம் ஒரு பிரச்சினையாகத் தெரிவதற்குக் காரணம்; இது தவிர மக்கள் தொகைப் பெருக்கம் என்பது உண்மையில் ஒரு பிரச்சினையே கிடையாது.

நகரங்களின் சேரிகளிலும், குடிசைப் பகுதிகளிலும் மக்கள் வதைபடும் அதேசமயம் மாடமாளிகைகளும் குதிரைப் பந்தயம், ''கால்ஃப்'' மைதானங்களும் நகரின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். பேருந்துகளிலும், இரயில்களிலும் நெரிசலில் சிக்கிப் பலர் தவிக்கும் போது, முதல் வகுப்பு பெட்டிகளிலும், கார்களிலும் ஓய்வெடுத்துக் கொண்டு சிலர் பயணிப்பதையும்தான் பார்க்கிறோம். நாட்டில் விவசாயத்திற்குத் தகுந்த நிலப்பரப்பில் 25 சதவீதம்தான் அதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மீதி தரிசாகவே கிடக்கிறது; அதேபோல ஆலைகளுக்கான மூலாதாரங்களில் 10 சதவீதம்தான் பயன்படுத்தப்படுகிறது; அதிலும் பெரும்பாலானவை அந்நிய நாடுகளால் கொள்ளையிடப்படுகிறது.

உணவு, உடை, இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைக்கான தொழில்கள் - சேவைகளுக்கு முதலீடு, முன்னுரிமை தருவதற்குப் பதில் ஒரு சிலரேயான மேட்டுக் குடியினரின் ஆடம்பர - சொகுசு வாழ்வுக்கான நுகர்பொருள் தேவைகளுக்கே முதலிடம் தரப்படுகிறது. இவையெல்லாம் கவனத்தில் கொள்ளாது, எல்லாவற்றுக்கும் மக்கள் தொகை அதிகரிப்பே காரணமெனக் கண்ணை மூடிக் கொண்டு சொல்லப்படுகிறது. எனவே அதைக் கட்டுப்படுத்துவதற்காக ஏராளமாக செலவு செய்து விளம்பரங்களும், திட்டங்களும் வருகின்றன.

இதில்கூட நமது ஆளும் கும்பலுக்கு சுயசிந்தனை, சுயசார்பு கிடையாது: அந்நிய ஆதிக்கவாதிகளின் தூண்டுதல், நிர்ப்பந்தம், நிதி - ஆராய்ச்சி, மேற்பார்வையிலேயே நடக்கிறது. 1994-ஐ மக்கள் தொகை ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. செப். 5-13 இல் மக்கள் தொகை மற்றும் முன்னேற்றம் மீதான சர்வதேச மாநாடு எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நடைபெற்றது. குடும்ப நலத்திட்டம் என்று பொய்யாக அழைக்கப்படும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்தும் ஓர் அரங்கமாக அந்த மாநாட்டைப் பெரும்பாலான மேலை நாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும் உலக ஆதிக்க சக்திகளும் பயன்படுத்திக் கொண்டன.



''இந்த பூமி தாங்கும் அளவை மக்கள் தொகை அடைந்துவிட்டது. சில பகுதிகளில் அதைவிட மிகையாகிவிட்டது; சுகாதாரம், முன்னேற்றம், சுற்றுச்சூழல் ஆகியவை மோசமாகி, வளரும் நெருக்கடிக்கான காரணம் மக்கள் தொகை பெருக்கம்தான். இன்று நிறைய மக்கள், நிறையக் குழந்தைகள் பெறுகிறார்கள்'' என்று மேலை நாடுகள் கூறுகின்றன. உலகப் பசி, பட்டினியை ஒழிக்கவும் நிலைத்த - நீடித்த பொருளாதார வளர்ச்சியைக் காணவும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிறார்கள்.

மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு எதிராக பல முனைத் தாக்குதல்கள் நடத்தும்படி மேலை நாடுகளும் அவற்றின் நிதி நிறுவனங்களும் ஏழை நாடுகளை நிர்ப்பந்திக்கின்றன. பெரிய குடும்பங்களைச் சமாளிக்கும் அளவுக்கு குறைந்த பட்ச வசதிகளற்ற பெற்றோர்கள் தமது சொந்த நன்மைக்காக, குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்குமாறு போதிக்க வேண்டும்; ஊக்கமளிக்க வேண்டும்; இலக்கு வைத்து நிறைவேற்றவும் வேண்டும் என்கிறார்கள். இதற்காக ஏராளமாக நிதியும், மருந்துகள் - கருத்தடை சாதனங்கள் - அறுவைச் சிகிச்சைக் கருவிகளும் தருகிறார்கள். அவர்களின் தேன் தடவிய வெற்றுக்கூச்சல், தாக்குதல் தோட்டாக்களின் உண்மையான இலக்கு தெற்கில் உள்ள ஏழை நாடுகளின் ஏழைப் பெண்கள்தாம். இது எப்படி என்பதைப் பிறகு பார்ப்போம்.

ஆ ால், பொருளாதார முன்னேற்றத்துக்கு ஏழை நாடுகளின் மக்கள் தொகைப் பெருக்கம்தான் 'காரணம் என்று கூறுவது உண்மையில், மேலைநாடுகளின் சுரண்டலினால் பாதிக்கப்பட்டவர்கள் மீதே பழி போடுவதுதான். ஐக்கிய நாடுகள் சபையின் குடும்ப நலத் திட்ட சங்கத்தின் அறிக்கை, ''பெருகிவரும் வறுமை, பட்டினி, சுற்றுச்சூழல் நாசமடைவது ஆகியவற்றுக்கான காரணம் மக்கள் தொகைப் பெருக்கமே'' என்கிறது. உலகின் 75% காடழிப்புக்கும், 72% தரிசு நில அதிகரிப்புக்கும் கால்நடைகளின் எண்ணிக்கை 69% அதிகரிப்புக்கும் காரணம் வளரும் நாடுகளின் மக்கள் தொகைப் பெருக்கம்தான் என்கிறது.

அதேசமயம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித வள முன்னேற்றம் பற்றிய அறிக்கையின்படி உலக மக்கள் தொகையில் 20 சதவீதமான மிகமிக ஏழை மக்கள் 1.3% உலக வருமானத்தையும், 0.2% உலகக் கடனையும் மட்டுமே பெறுகிறார்கள்; உலக வர்த்தகத்தில் 0.9% மட்டும்தான் பங்கு பெறுகிறார்கள். ஏழை நாடுகளின் இயற்கைச் செல்வங்கள், மூலாதாரங்கள் பணக்கார நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வ


படிப்பகம்

www.padippakam.com

தற்காகத்தான் அழிக்கப்படுகின்றன. அவற்றின் தேவைக்கான மரங்களுக்காக காடுகள் மேலும் மேலும் அழிக்கப்படுகின்றன. கழிவுகளையும், நச்சுக்களையும் வெளித்தள்ளும் ஆலைகள் பலவும் ஏழை, பின்தங்கிய நாடுகளில் நிறுவப்படுகின்றன. ஆனால் சுற்றுச்சூழல் நாசமடைவதற்கான பழி ஏழைநாடுகள் மீதே சுமத்தப்படுகிறது.

உலகின் பெருகிவரும் மனித மற்றும் சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்கெல்லாம் பிரதானக் காரணம், நியாயமற்ற உலகப் பொருளாதாரக் கொள்கைதானே தவிர பெருகும் உலக மக்கள் தொகை அல்ல. கால்வாயின் மேல்கரையில் தண்ணீர் குடிக்கும் நரி, கீழ்கரையில் உள்ள ஆட்டின் மீது பழிபோடும் நரித்தனம் தான் இது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் ஒரு சராசரி நபர் ஆசியா, ஆஃப்ரிக்கா, தென் அமெரிக்க நாடுகளில் வாழும் ஒரு ஏழையை விட 50 மடங்கு அதிகமாக உலக எரிசக்தியையும், பிற மூலாதாரங்களை நுகர்கிறான்; 50 மடங்கு குப்பைகளையும் நச்சுக் கழிவுகளையும் தள்ளுகிறான்.

மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் இடையே உள்ள ஏற்ற தாழ்வுகள் மட்டுமல்ல, நமது மூலாதாரங்களைச் சுரண்டிக் கொள்ளையிடுவதுதான் மிகையான நுகர்வுக்கும், சுற்றுச்சூழல் அழிவுக்கும் காரணமாக உள்ளது. உலகின் 75% மூலாதாரங்களை (அவை பெரும்பாலும் கீழை நாடுகளில்தான் உள்ளன) உலக மக்கள் தொகையில் 25% பேரே அனுபவிக்கிறார்கள். உலக மூலாதாரங்களில் ஒரு சோமாலியனைக் காட்டிலும் 40 மடங்கு ஒரு சுவிசு நாட்டுக்காரன் நுகர்கிறான். ஒவ்வொரு வங்கதேசியும் ஒரு ஆண்டுக்கு 3 பீப்பாய் எண்ணெய் அளவுக்கேயான எரிசக்தியைப் பயன்படுத்துகிறான்; அதே சமயம் ஒவ்வொரு அமெரிக்கனும் சராசரி 55 பீப்பாய் அளவுக்கு பயன்படுத்துகிறான். ஆகவே, மிகையான மக்கள் தொகையினால் பூமிக்கு ஆபத்து என்றால், அது மேலைநாடுகளின் மக்கள் தொகை அதிகரிப்பதினால் ஏற்படுவதுதான். அங்குதான் கீழைநாடுகளைவிட சராசரி நுகர்வு அதீதமாக உள்ளது.

மேலும் 1985-இல் 1,80,000 கோடி ரூபாய், 1986-இல் 3,00,000 கோடி ரூபாய் என்று ஏழை, பின்தங்கிய நாடுகள் பொருள் வர்த்தகத்தின் மூலம் மேலைநாடுகளிடம் இழந்துள்ளன. இதனால் வறுமை ஒழிப்பு, நிலைத்த முன்னேற்றம் என்பது சாத்தியமற்றுப்போய், சமூக சேவைகள் வேலை வாய்ப்புக்கான நிதி ஒதுக்கீடு வெட்டப்பட்டுவிட்டது. உலக வங்கி, ஐ.எம்.எஃப். ஆகியவற்றின் கட்டுமானச் சீரமைப்பு திட்டங்கள் சுகாதாரம் சத்துணவு, மற்றும் குடும்ப நலன்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைக் குறைக்கும்படி செய்கின்றன. அவற்றின் ஏற்றுமதி அடிப்படையிலான திட்டமிடுதலின் காரணமாக, பஞ்சம் - பட்டினி, காடழிப்பு, மண்வளம் குறைதல், மூலாதாரங்கள் மாசுபடுவது, மழைப்பொழிவு பாதிப்பு ஆகியவைகள் ஏற்படுகின்றது. 1984-85-இல் எத்தியோப்பியப் பஞ்சம் பத்து லட்சம் பேரைப் பலி கொண்டபோதும், அந்நாடு இங்கிலாந்திற்கு பச்சை பட்டாணி ஏற்றுமதி செய்தது. 198^-இல் பஞ்சம் சூடானின் கதவைத் தட்டிய போதும் ஐரோப்பிய சமூக நாடுகளுக்கு 4 லட்சம் டன்கள் மக்காச்சோளம் கொடுத்து கால்நடைத் தீவனத்தை பண்ட மாற்றம் செய்து கொண்டது.

''சுதந்திரச் சந்தைப் பொருளாதாரம்'' என்கிற மேற்கத்தியப் பாணியைப் பின்பற்றுவதால் ஏழை, பின்தங்கிய நாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் பெருகுவதும் நகர்

## முகவரி மாற்றம்

அன்பார்ந்த வாசகர்களே, முகவர்களே!

புதிய ஜனநாயகம் இதழுடன் தொடர்பு கொள்வதற்காக இருந்த 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015 என்ற முகவரி மாற்றப்பட்டுள்ளது. இனி புதிய ஜனநாயகத்திற்கு படைப்புகள், கடிதங்கள், சந்தா, விற்பனைத் தொகை அனுப்புவதற்கும் மற்றும் அனைத்து தொடர்புக்கும் கீழ்கண்ட முகவரியை பயன்படுத்தும்படி கோருகிறோம்.

இரா. சண்முகராசு,
ஆசிரியர்
''புதிய ஜனநாயகம்''
25 அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.



www.padippakam.com

புறக் குடியேற்றமும் குடிசைப் பகுதிகள் - சேரிகள் அதிகரிப்பதும் பட்டினியும் வறுமையும் வாட்டுவதும் பாகிஸ்தான், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், வங்க தேசம், இந்தியா, இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு ஓடுவதும் நிகழ்கின்றது.

இந்த உண்மைகளை எல்லாம் மூடி மறைத்துவிட்டு, மக்கள் தொகைப் பெருக்கம்தான் சகல வகைப் பிரச்சினைகள், நெருக்கடிகளுக்கும் காரணமென்று ஏழை, பின்தங்கிய நாடுகளின் அரசுகளும், மேலை நாடுகளும் அவற்றின் நிதி மற்றும் சமூக சேவை அமைப்புகளும் புளுகுகின்றன. எனவே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரப்படுத்துவதை ஒரே தீர்வாக வைத்து அதற்காக கோடி கோடியாகக் கொட்டிச் செலவழிக்கின்றனர். கீழைநாடுகளில் முதலீடு செய்வதற்கும், வளர்ச்சி மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கு நிதி உதவி செய்வதற்கும் இதை ஒரு முன் நிபந்தனையாக மேலை நாடுகள் விதிக்கின்றன. ஆபத்தான கருத்தடை மாத்திரைகள் - சாதனங்களையும், வழிமுறைகளையும் திணிக்கின்றன.

இதனால் பெரும்பாலும் பெண்கள் தாம் (சில சமயங்களில் ஆண்களும்) "சமூக சந்தை"ச் சரக்காக்கப் படுகிறார்கள். குடும்பக் கட்டுப்பாட்டை ஒப்புக் கொள்ளும்படி பல வழிகளிலும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். பல சமயம் பட்டினி கிடக்கும் தமது குழந்தைகளுக்கு உண ஊட்டுவதற்கு ஈடாக அவர்களது இனவிருத்திச் செயல்களை அடகு வைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பல நாடுகளில் ஊக்கச் சலுகைகள் அளிப்பது முதல் அரசு மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு "கோட்டா" - இலக்கு நிர்ணயித்தும் கட்டாயப்படுத்துகின்றனர். இது உண்மையில் மனித உரிமை மீறல்களாகும்.

"மேலை நாடுகளில் ஒரு குடும்பத்துக்கு இரண்டு கார்கள், கீழைநாடுகளில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை" என்கிற இத்தகைய திட்டங்களால் வறுமை, உலகப் பட்டினி, உயிரியல் - சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியவற்றுக்குத் தீர்வு காணவே முடியாது; மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் இடையேயும் உள்நாடுகளிலேயும் சமத்துவமான சமூகப் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுவது, செல்வத்தையும் மூலாதாரத்தையும் நியாயமாகப் பங்கு செய்வது ஆகியவற்றின் மூலமே தீர்வுகாண முடியும். உலகு தழுவியதொரு பேரழிவில் இருந்து தற்போதைய அநீதியானதொரு சமூக ஒழுங்கமைப்பை.காத்துக் கொள்வதற்காகத்தான் "மக்கள் தொகை அபாயம்" என்கிற கூக்குரல் எழுப்பப்படுகிறது.

மக்கள் அனைவரது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதை உறுதிப் படுத்தும் போதுதான் மக்கள் தொகை

> மிகையான மக்கள் தொகையினால் பூமிக்கு ஆபத்து என்றால், அது மேலைநாடுகளில் மக்கள் தொகை அதிகரிப்பதினால் ஏற்படுவதுதான். அங்குதான் கீழைநாடுகளைவிட சராசரி நுகர்வு அதீதமாக உள்ளது.

அதிகரிப்பு குறையும், நிற்கும். சமூகப் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் பெற்றோர்கள் சமூகம் தரத்தவறிய பாதுகாப்பைப் பெறுவதற்கான ஒரு வழியாக நிறையக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். நகரமோ, கிராமமோ, சிறுவர் உழைப்பும் வருமானமும் வறுமையில் வாடும் பல குடும்பங்களுக்கு மிக மிக அவசியமானவை. பெற்றோர்கள் வேலையில்லாமல், நோய் பீடித்து, வயதாகிப் போகும் போது அவர்களைக் கவனிப்பதற்கும் துணை நிற்பதற்குமான மூலாதாரத்தைக் குழந்தைகள் தருகின்றன. குடும்பத்தின் சமூகப் பொருளாதார நிலைமை மோசமாக மோசமாக, குழந்தைகளின் சாவு விகிதம் அதிகமாக அதிகமாக நிறையக் குழந்தைகள் பெறுவது மிகமிக அவசியமான காப்பீட்டுத் திட்டமாக உள்ளது.

வெகுகாலத்துக்கு முன்பே ஒழிக்கப் பட்டு விட்டதாகக் கூறிக் கொள்ளும் காலரா, பிளேக், மலேரியா போன்ற கொள்ளை நோய்கள் மீண்டும் பரவி பெரும் எண்ணிக்கையில் மக்களை வாரிக் கொண்டு போகும் போது, சுகாதாரத் திட்டங்களுக்கான செலவுகளைக் கடுமையாக அரசு குறைத்திடும் போது, ஏழைகளின் வாழ்க்கைக்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது. ஏழ்மையாலும், சுற்றுச் சூழல் மாசுபடுவதாலும் இந்நோய்கள் மேலும் பரவுகின்றன. வறுமையினால் வரும் எலும்புறுக்கி நோய்க்கு ஆண்டுதோறும் 20 லட்சம் பேர் பலியாகின்றனர். இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு நிதி உதவி தரமறுக்கும் அதேசமயம் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆண்டு தோறும் செலவழிக்கப்படுவது பெருகிவருகிறது. உலக வங்கியானது 1969-70-ஆம் ஆண்டில் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மட்டும் 81 கோடி ரூபாய் உதவியது; அதுவே 1990-இல் 1500 கோடி ரூபாயாகவும், 1993-இல் 3900 கோடி ரூபாயாகவும், 1995-இல் 7500 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

மேல்நிலை வல்லரசுகளும் அவற்றின் நிதி நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளும் பிற நாடுகளின் மக்கள் தொகைப் பிரச்சினையில் இவ்வளவு தூரம் அக்கறை செலுத்துவது ஏன்? உலகப் பொருளாதாரத்தையும், மூலாதாரங்களையும் முழு அளவில் கைப்பற்றிக் கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாகவே இதைக் கருதுகின்றனவே தவிர பெருகிவரும் மக்கள் துன்ப துயரங்களினால் அல்லல்படுவார்கள் என்ற அக்கறையினால் அல்ல. இந்த பூமிக்கு ஆபத்து பெருகிவரும் மக்கள் தொகையினால் கிடையவே கிடையாது. ஒரு சராசரி நைஜீரியனைவிட 250 மடங்கு அதிகமாக எரிசக்தியைப் பயன்படுத்தும் அமெரிக்கனால்தான் ஆபத்து.

ஆனால், அந்த அமெரிக்கப் பகற் கொள்ளைக்காரன் சொல்கிறான், "மனித இனத்துக்கும், உயிர் வாழும் (ஜீவ சக்தி) உலகுக்கும் இடையிலான ஒரு சண்டையின் மத்தியில் நாம் வாழுகிறோம். இது ஒரு முழுமையான யுத்தமாகவே வெடித்துவிட்டது" (மைக்கேல் டோபாஸ் என்பவன் எழுதிய "மூன்றாம் உலகப் போர்") சுருக்கமாகச் சொன்னால், சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஆஃப்ரிக்கா ஆகிய நாடுகளில் வாழும் மக்கள் இந்தப் பூமிக்கு எதிராக "யுத்தம்" நடத்துகிறார்களாம். ஆம், இது அமெரிக்கா வழக்கமாகப் படையெடுத்துப் போய் ஆக்கிரமிக்கும் முன் எதிராளிகளுக்கு எதிராக சொல்லும் குற்றச்சாட்டுப் போன்றதுதான். உலகின் மக்கள் அனைவருக்கும் எதிராக அமெரிக்கா, பிரகடனப்படுத்தியிருக்கும் இந்தப் போரை நாம் சந்தித்தே ஆக வேண்டும்.

● ம.வா.


"புதிய ஜனநாயகம்" பற்றிய அறிக்கை
(4-வது பாரம், 8-ம் பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | : சென்னை |
| 2. | வெளியிடும் காலம் | : மாதமிருமுறை |
| 3. | அச்சிடுபவர் | : இரா. சன்முகராசு |
| | தேசிய இனம் | : தமிழர் |
| | முகவரி | : எழில் பிரிண்ட்ஸ் 110, இரண்டாம் தளம் 63, ஆற்காடு சாலை கோடம்பாக்கம் சென்னை - 600 024. |
| 4. | வெளியிடுபவர் | : இரா.சன்முகராசு |
| | தேசிய இனம் | : தமிழர் |
| | முகவரி | : 4, சாமியார் தோட்டம் ஆலந்தூர் சாலை சைதாப்பேட்டை சென்னை - 600 015. |
| 5. | ஆசிரியர் | : இரா.சன்முகராசு |
| | தேசிய இனம் | : தமிழர் |
| | முகவரி | : 4, சாமியார் தோட்டம் ஆலந்தூர் சாலை சைதாப்பேட்டை சென்னை - 600 015. |
| 6. | உரிமையாளர் | : இரா.சன்முகராசு |
| | தேசிய இனம் | : தமிழர் |
| | முகவரி | : 4, சாமியார் தோட்டம் ஆலந்தூர் சாலை சைதாப்பேட்டை சென்னை - 600 015. |

இரா. சன்முகராசுவாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

1.3.1996

(ஒப்பம்) இரா.சன்முகராசு,
வெளியிடுபவர்.

www.padippakam.com

# மலையோடு தலை கொண்டு மோதும் முட்டாள் கும்பல்

மதுரை - உத்தமபாளையம் வட்டத்தைச் சேர்ந்த க. புதுப்பட்டி கிராமத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி, புறம்போக்கு நிலங்களை நிலமற்ற கூலி விவசாயிகளுக்குச் சொந்தமாக்குவதன் மூலம் அவற்றை வளைத்துப் போட்டு உரிமை கொண்டாடும் அப்பகுதி பண்ணை ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடி வருகிறது. தோப்பு, தோட்டம், வயல், தனிக்காடு, மணல்காடு என நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தங்கொண்டாடும் இப்பகுதி பண்ணையார் கே.எல்.எஸ்.எஸ். நடராசன், உள்ளூரில் பள்ளிக்கும், மருத்துவமனைக்கும் ஏழை விவசாயிகளுக்கும் நிலத்தை தானமாகக் கொடுத்ததாகக் கூறி வள்ளல் போர்வையில் நடமாடும் இந்த பண்ணையார், புறம்போக்கு நிலத்தில் முக்கால் குழியை கைவசப்படுத்திய கூலி விவசாயி முருகனுக்கு எதிராகப் பாய்ந்து தாக்குதல் தொடுத்து வருகிறார்.

முருகன் கையகப்படுத்திய நிலம் என்னுடையது எனக் கிராம அதிகாரியிடம் முறையிட்ட பண்ணையார் நிலத்தை சர்வே செய்யுங்கள் என்று வி.வி.மு. தோழர்கள் முன்நின்று கூறிய பின் பின்வாங்கிக் கொண்டார். ஏனெனில் அருகில் ஏற்கனவே ஆக்கிரமித்திருக்கும் 2 குழி வயலும் சிக்கி விடும் என்ற பயம். பிறகு பொய்க் காரணங்களை வைத்து நீதிமன்றத்தில் வழக்கு போட்டார். தற்போது பிரச்சினை நீதிமன்ற விசாரணையில் இருந்தாலும் வி.வி.மு-வின் உறுதிமிக்க நடவடிக்கை கண்டு பீதியடைந்து நேரடித் தாக்குதலில் இறங்கியுள்ளார். 24.11.94 அன்று முருகன் பயிரிட்டிருந்த வெண்டிச் செடிகளை எல்லாம் பிடுங்கி ஆற்றில் எறிந்தது, பண்ணையார் கும்பல். இதற்கு எதிராக வி.வி.மு-வினர் போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுப்பதை விடுத்து கட்டைப் பஞ்சாயத்து செய்ய முயன்றது போலீசு. நடராசன் விட்டெறிந்த காசுக்கு ஏற்ப போலீசு ஊழியம் செய்ததால், வி.வி.மு.வினர் பிரசுரம், தட்டி, சுவரெழுத்து வாயிலாக பரவலாக மக்கள் மத்தியில் பிரச்சினையை கொண்டு சென்றனர்.

பண்ணையார் பதிலுக்கு சர்வகட்சி மற்றும் பொதுமக்கள் என்ற பெயரில் ஒரு பிரசுரம் போட்டு விநியோகித்தார். பகுதி தி.மு.க. செயலாளர் விருமாண்டியும் அவரது தம்பி எஸ்.முருகனும் பண்ணையாரின் கையாட்களாக இருந்து செயல்படுகிறார்கள். பகுதியில் நடந்த ஒரு சண்டையில் விலக்கிவிடச் சென்ற வி.வி.மு. தோழர் பி.டி. ராசனைத் தாக்கினார்கள். வெண்டிச்செடி அழித்ததற்கு நட்ட ஈடாக 12000 ரூபாய் கேட்டு கட்டப்பட்டிருந்த தட்டியை 14.1.95 அன்று பண்ணையார் ஆட்கள் உடைத்து எறிந்தார்கள்.

இதுபோன்ற அடாவடிச் செயல்கள் மூலம் வி.வி.மு.வினரை ஆத்திரமூட்டி நடவடிக்கைக்குத் தூண்டி போலீசு வழக்கில் சிக்க வைப்பதே பண்ணையாரின் நோக்கம். மேலும் முன்னணியாளர்களைத் தாக்கி கலவரப்படுத்தி மக்களுக்குப் பயங்காட்டி வி.வி.மு. பின் திரளாமல் செய்துவிடலாம் என கனவு காண்கிறார்கள். ஆனால், வி.வி.மு-வின் சரியான அணுகுமுறை, உறுதியான நடவடிக்கை, பரவலான பிரச்சாரத்தின் காரணமாக மக்கள் நம்பிக்கை பெற்று ஆதரவளிக்கின்றனர்.

மக்களுக்குப் பண்ணையார்தான் எதிரி என்பதால் அவருக்கு விசுவாச ஊழியம் செய்யும் விருமாண்டிக்கு எதிராக தி.மு.க. ஒன்றியத் தலைமையிடமும் சர்வகட்சியினரிடமும் கண்டனக் கடிதம் கொடுத்து நடவடிக்கை எடுக்க வி.வி.மு. நிர்பந்தித்துள்ளது. எடுபிடிகள் தொடர்ந்து மக்கள் எதிரியின் பக்கமே நின்று தாக்குதல் தொடுப்பாளர்களாயின் பண்ணையாருடன் சேர்த்து அவர்களுக்கும் தக்க பதிலடி கொடுப்போம் என வி.வி.மு. எச்சரித்துள்ளது.

## நாடு மறுகாலனியாவதை எதிர்த்துப் பிரச்சாரம்

நாடு மறுகாலனியாகி வரும் இன்றைய நிலையில் தொழிற்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் ஓட்டுக்கட்சி தொழிற்சங்கங்களின் துரோகங்களையும் எடுத்து விளக்கிய பொதுக்கூட்டம் நெய்வேலியில் தொழிலாளர் பிரச்சாரக் குழு சார்பாக 11.2.95 அன்று நடந்தது. தோழர். லெனின் தலைமையில் தோழர்கள். சங்கர், தங்கராசு ஆகியோர் உரை நிகழ்த்தினர். 'மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் கலைக் குழு தோழர்களால் ''அசுர கானங்கள்'' என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கூடி நின்று கேட்டு ஆதரவளித்தனர்.

# மருத்துவமனை கட்டணக் கொள்ளைக்கு எதிராக...

அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர் கட்டணம் வசூலிக்கப்படுவதைக் கண்டித்து மதுரை புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் ஜனவரி 25-ந் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தினர். மதிச்சியம் போலீசு நிலையத்தில் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்தனர். மேலதிகாரிகளுக்கு மனு செய்தபோது மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு எதிரில் அனுமதி மறுக்கப்பட்டு அதன் அருகில் மூங்கில் கடை பஜார் தெரு முனையில் அனுமதி கொடுத்தார்கள். பிரச்சாரம் சம்பந்தப்பட்ட மக்களுக்குச் செல்லவிடாமல் தடுக்கும் முகமாக போலீசு இவ்வாறு செய்தது. எனினும் அனைத்து மக்களுக்கும் பிரச்சாரம் சென்றடையும் வண்ணம் இயக்கம் எடுக்கப்பட்டது. தோழர். ரவீந்திரன் தலைமை தாங்கினார். ''பாரத ரத்னா மக்கள் முன்னேற்றக் கழகம்'' என்ற அமைப்பும் இதில் கலந்து கொண்டது.

# அடிப்படை வசதி கேட்டு மறியல் போராட்டம்

மதுரை ஜீவாநகர் அருகே அம்பேத்கர் நகரில் 20 வருட காலமாக 150 குடும்பங்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகின்றனர். எந்த அடிப்படை வசதியும் இன்றி அல்லலுறும் இம்மக்கள் அதிகாரிகளுக்குப் பல மனுக்கள் போட்டும் பயனில்லை. எனவே பிப்ரவரி 14-ந் தேதி வீட்டுமனைப்பட்டா, மின்சாரம் - குடிநீர் - சுகாதாரம் போன்ற வசதிகள் கேட்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். இதற்கு புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் நகரச் செயலாளர் இரவீந்திரன் தலைமை தாங்கினார். 45 பெண்கள் உட்பட சுமார் 100 பேர் திரண்டு மதுரை கல்லூரி அருகே அமர்ந்து போராடியதும் போக்குவரத்து நின்று போனது. ஓடிவந்த போலீசு அதிகாரிகள் கோரிக்கையைப் பற்றி பேச அதிகாரிகளை வரவழைக்க மறுத்து அனைவரையும் கைது செய்தனர். ஒரு நாள் காவலில் வைத்துப் பின்னர் விடுவித்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

# நானும் என் கால்களால் நடந்தேன்

ஆட்சியாளர்களும் அனைத்து ஓட்டுக்கட்சிகளும் பத்திரிகைகளும் இந்துவெறி - தேசியவெறியூட்டி காஷ்மீரில் தொடரும் அரசு பயங்கரவாத அடக்குமுறையை நியாயப்படுத்தியே வருகின்றன. ஆனால், காஷ்மீரில் இந்திய ராணுவம் நடத்திவரும் பயங்கரவாத அட்டூழியங்களை அறிந்தால் மனித நேய முள்ள எவரும் கொதித்தெழவே செய்வர். காஷ்மீர் கைநழுவிப் போகாமல் உயிரைப் பணயம் வைத்துப் போராடி வருவதாகச் சித்தரிக்கப்படும் இந்திய ராணுவத்தின் கோர முகத்தை இந்த வதையின் கதை படம் பிடித்துக் காட்டுகிறது.

என் பெயர் குலாம் முகம்மது. குலாம் என்றால் இளமையான - அழகான என்று பொருள். ஆனால் எனக்கு 57 வயதாகிறது. பழ வியாபாரம் எனது தொழில். மனைவியை இழந்த நான், பின்னர் மறுமணம் செய்து கொண்டேன். என் மனைவி சயீதா, என்னை விட பல வயது இளமையானவர். நான் ஒரு தர்காவை நடத்தி வந்தேன். அங்கே குரான் மற்றும் பிற இஸ்லாமியக் கல்வியில் எனது பங்களிப்பைச் செய்து வந்தேன். 1991-ம் ஆண்டு மார்ச் 22-ம் தேதி வரை நான் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தேன்.

சோபூரிலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள ரேபாவ் கிராமத்திலுள்ள எனது வீட்டில் அன்று காலை 6 மணியளவில் ராணுவத்தினர் என்னைக் கைது செய்தனர். நான் சோபூர் ராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அங்கு நான் முற்றாக ஆடைகள் களையப்பட்டு, ஐஸ் கட்டிகள் நிறைந்த நீர்த் தொட்டிக்குள் வீசியெறியப்பட்டேன். அந்த முகாமின் கூரைகளிலிருந்து ஒழுகித் தொங்கிக் கொண்டிருக்கும் பனிக்கட்டிகளை சிப்பாய்கள் சேகரித்து வந்து அந்தத் தொட்டியில் போட்டார்கள். குளிரால் நான் நடுங்கினேன். பனிக்கட்டி நீர் எனது தலையில் கொட்டப்பட்டது. இது தவிர எனது நிர்வாண உடலின் மீது தடியடியும் நடத்தினர். அவர்கள் போராளிகளைப் பற்றி தொடர்ந்து விசாரித்துக் கொண்டே காட்டுத்தனமாகத் தாக்கினார்கள். எனக்கு எதுவுமே தெரியாது என்று மன்றாடினேன். ராணுவத்திடம் மறைப்பதற்காக அல்ல; உண்மையிலேயே எனக்குப் போராளிகளின் செயல்பாடுகள், மறைவிடங்கள் பற்றி எதுவுமே தெரியாது.

இரண்டாவது நாள் என் கண்களைக் கட்டி எங்கோ கொண்டு சென்றார்கள். கண் கட்டுகளை அவிழ்த்த போது நான் 12 அடிக்கு 12 அடி அளவுள்ள சிறிய அறையில் இருப்பதை உணர்ந்தேன். அந்த அறையில் 13 வயதிலிருந்து 25 வயதுக்குட்பட்ட 2 டஜன் இளைஞர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். இது, பாதமிபாக் ராணுவ விசாரணை முகாம் என்பதை அவர்களிடமிருந்து தெரிந்து கொண்டேன். அந்த இளைஞர்களின் கண்களைச் சுற்றிக் கருவளையமாகக் காணப்பட்டது. இராணுவத்தால் தாங்கள் மிகக் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டதாக அவர்கள் கூறினார்கள். அவர்களது உடல்நிலை மிகவும் வேதனைக்குரியதாக இருந்தது.

பின்னர் நான் மருத்துவப் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டேன். அங்கேயும் என்னை முழுவதுமாக நிர்வாணப்படுத்தி மிகக் கொடூரமாகத் தாக்கினார்கள். சிறிது நேரத்தில் மருத்துவர் வந்தார். தமது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும், மேலும் என்னை அடிக்க வேண்டாம் என்றும் சிப்பாய்களிடம் அவர் கூறினார். மருத்துவர் என்னைப் பரிசோதித்தார். பிறகு ஆடைகளை அணிந்து கொண்டு சிப்பாய்களுடன் செல்லுமாறு கூறினார்.

பாதமிபாக் முகாமில் 3 அடிக்கு 7 அடி கொண்ட மிகச் சிறிய கொட்டடியில் நான் அடைக்கப்பட்டேன். காலைக் கடன்களை முடிப்பதற்காக மட்டுமே அக்கொட்டடிக் கதவு திறக்கப்பட்டது. அக்கொட்டடியில் ஒரு நாளைக்கு இரு முறை மட்டும் எனக்கு உணவு தரப்பட்டது. மிக மோசமாக சமைக்கப்பட்ட வறட்டி போன்ற 2 சப்பாத்தியும் கொஞ்சம் சோறும் பருப்பும் தரப்பட்டது. இந்த உணவைச் சாப்பிட்டதும் எனக்கு வாந்தி வருவது போல் இருக்கும். சிரமப்பட்டு அடக்கிக் கொள்வேன். அந்த தனிமைக் கொட்டடியில் நான் மூன்று நாட்கள் அடைத்து வைக்கப்பட்டேன்.

பின்னர் என் கண்களைக் கட்டி பழைய விமான நிலையச் சாலையிலுள்ள விசாரணை முகாமுக்குக் கொண்டு சென்றனர். வழியெங்கும் என்னை காட்டுமிராண்டித்தனமாக அடித்துக் கொண்டே வந்தனர். முகாமிற்குள் நுழைந்ததும் அங்கிருந்த சிப்பாய்கள் எனது தாடியைப் பிடித்து இழுத்து என்னை வரவேற்றனர். என்னை நிர்வாணமாக்கி ''எலாஸ்டிக் ஒயர்'' கம்பியால் காட்டுமிராண்டித்தனமாக அடித்தனர். எனது உடலெங்கும் சித்திரவதையின் காயத் தழும்புகள் காணப்பட்டன.

பின்னர் மின்சாரம் பாயும் கம்பியை எனது கன்னத்தில் வைத்தனர். எனது முழு உடலும் மின் அதிர்ச்சியால் நடுங்கியது. இந்த மின் கம்பிகள் ஒரு இயந்திரத்தில் இணைக்கப்பட்டிருந்தன. ஒரு சிப்பாய் அந்த இயந்திரத்தின் உருளைக் கைப்பிடியைச் சுற்றி, மின்சாரத்தை உற்பத்தி செய்தான். பின்னர் அவர்கள் என் மீது குளிர்ந்த நீரைக் கொட்டினார்கள். கூடவே மின்சாரத்தையும் பாய்ச்சினார்கள். ரண வேதனையாலும் மின் அதிர்ச்சியாலும் எனது உடல் நடுங்கியது. நான் பலமுறை நினைவிழந்து விழுந்தேன். ஒரு சிப்பாய் வந்து எனது தாடியைப் பிடித்து இழுத்துக் கீழ்த்தரமாகவும் ஆபாசமாகவும் திட்டி எழுந்து நிற்க வைப்பான். அந்த முகாமில் 15 நாட்கள் நான் இருந்தபோது 3 நாட்களுக்கொருமுறை இத்தகைய சித்திரவதை தொடர்ந்தது.

ஏப்ரல் 16-ந் தேதியன்று தட்டச்சு செய்யப்பட்ட ஒரு காகிதத்தில் என்னையும், அந்த முகாமிலிருந்த 8 சிறுவர்களையும் கையெழுத்திட வைத்தனர். பின்னர் எங்களை சிறீநகரிலுள்ள போலீசு கட்டுப்பாடு அறைக்குக் கொண்டு சென்றனர். நான் விடுதலை செய்யப்பட்டதாக அங்கே போலீசார் கூறினர்.

நான் வீட்டுக்குத் திரும்பியதும் அதிர்ச்சியடைந்தேன். நான் கைது செய்யப்பட்ட 5 நாட்களில் என் அன்பு மனைவி சயீதா இறந்துவிட்ட செய்தி என்னைத் தாக்கியது. எனது வாழ்க்கையின் சோகமான விதியை எண்ணி நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

ஐந்து மாதங்கள் கடந்தது. அன்று 1991 நவம்பர் 4-ம் நாள். எனது பழ வியாபார வேலையாக அருகிலுள்ள லோரிஹமா கிராமத்துக்குச் சென்றிருந்தேன். இன்னும் பொழுது விடியவில்லை. ராணுவம் அந்தக் கிராமத்தை முற்றுகையிட்டது. அதிகாலைத் தொழுகை முடித்து அனைவரும் வீட்டை விட்டு வெளியே வந்து நிற்க வேண்டும் என்று ராணுவம் ஒலிபெருக்கியில் எச்சரித்தது. நான் உட்பட, அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் அனைவரும் திறந்தவெளி மைதானத்தில் வந்து குழுமினோம். அவர்கள் ஒவ்வொருவரையும் விசாரித்துக் கொண்டே வந்தனர். இந்த ராணுவப் பிரிவினர்தான் முன்பு என்னைக் கைது செய்தவர்கள். கூட்டத்தில் என்னைப் பார்த்ததும் அவர்கள் ஆச்சரியமும் சந்தேகமும் கொண்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் 50-60 பேர் இருந்தனர். அவர்களில் சிலர் எனது தாடியைப் பிடித்து இழுத்துத் தனியே நிறுத்தி வைத்து விசாரித்தனர். பின்னர் நான் ஒரு மரத்தடிக்குக் கொண்டு செல்லப்பட்டேன். எனது கால்களை அவர்கள் கயிற்றால் கட்டினர். கயிற்றின் மறுமுனையை மரத்தில் கட்டினர். பின்னர் என் கைகளையும் கயிற்றால் கட்டினர். அந்தக் கயிற்றின் மறுமுனையை ராணுவ ''ஜீப்''பில் கட்டினர். ''ஜீப்''பை ஓட்டினால், இருபுறமும் இழுபட்டு எனது உடல் கைவேறு, கால் வேறாகப் பிய்த்தெறியப்பட்டு விடும். ''ஜீப்'' கிளம்பத் தயாராக இருந்தது. அப்போது ஒரு ராணுவ அதிகாரி வந்து அவர்களிடம் குறுக்கிட்டு ஏதோ பேசினார். பின்னர் என் கை-கால் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன. அருகிலுள்ள எடிபோரோ கிராமத்துக்கு அவர்கள் என்னைக் கொண்டு சென்றனர்.



அந்தக் கிராமத்திலும் ஊரடங்கு உத்திரவு போடப்பட்டு ராணுவம் ஒவ்வொருவரையும் விசாரித்துக் கொண்டிருந்தது. கிராமத்திலுள்ள பொது இடத்தில் மக்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். என்னை அங்கே கொண்டு சென்றதும், எல்லோருடைய முன்னிலையிலும் எனது ஆடைகளைக் களைந்து நிர்வாணப்படுத்தினர். எனது கைகளும் கால்களும் நெருக்கமாகக் கட்டப்பட்டன. எனது கால்களுக்கிடையில் பெரிய இரும்புத் தடியைத் திணித்தனர். ஒரு சிப்பாய் அந்த இரும்புத் தடியை மேலும் கீழும், இடமும் வலமுமாக வேகமாக அசைத்தான். இதனால் எனது உள்ளங்காலிலிருந்து இடுப்பு வரை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு தாங்க முடியாத வலி ஏற்பட்டது. பின்னர் மின்சாரம் பாயும் கம்பிகளை எனது கன்னங்களில் மாறி மாறி வைத்தனர். எனது உடல் முழுவதும் வலியாலும் மின் அதிர்ச்சியாலும் நடுங்கியது. பிறகு எனது பிறப்புறுப்பைப் பிடித்துக் கோணி ஊசியை வைத்துக் குத்தினர். இரத்தம் பீறிட்டு, வலி தாளாமல் நான் மயக்கமடைந்தேன். நினைவு திரும்பி நான் கண் விழித்து பார்த்தபோது அந்த சிப்பாய்கள் மிளகாய்ப் பொடியையும் உப்பையும் ஒரு குவளையில் கொட்டி நீரூற்றிக் கரைத்துக் கொண்டிருந்தனர். என் அருகே வந்த அவர்கள் என்னைப் புரட்டிப் போட்டு எனது ஆசன வாயில் ஒரு இரும்புத் தடியை வேகமாகச் சொருகினர். வலி தாளாமல் நான் அலறினேன். அப்போது உப்பு - மிளகாய் கரைசல் எனது ஆசன வாயில் ஊற்றப்பட்டது. வேதனையால் துடித்த நான் அரற்றினேன். இப்படி சித்தரவதையை அனுபவிப்பதைவிட, செத்து விடுவதே மேல் என்று நான் விரும்பினேன். நாள் முழுவதும் இந்த சித்திரவதை தொடர்ந்தது. அத்தனையும் அக்கிராம மக்கள் முன்னிலையிலேயே நடந்தது.

அப்போது மாலை 3.30 மணி. நான் பஞ்சாப் ராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அங்கே ஒரு நாளைக்கு 3 முறை - காலை, மதியம், நள்ளிரவு என முறைவைத்தாற் போல் சித்திரவதை தொடர்ந்தது. நான் மிருகத்தனமாக அடித்துத் துவைக்கப்பட்டேன். என் உடலில் பலமுறை மின்சாரம் பாய்ச்சப்பட்டது. நான் மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்பட்டேன். போராளிகள் எங்கு மறைந்திருக்கிறார்கள் என்று கேட்டு தொடர்ந்து என்னை வதைத்தார்கள். எனக்குத் தெரியாது என்று மீண்டும் மீண்டும் மன்றாடினேன். காஷ்மீரிகள் ஏன் இந்தியாவின் ஒரு அங்கமாக இருக்க விரும்பவில்லை என்று கேட்டனர். இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் நான் மவுனமாக நின்றேன். ஆத்திரமடைந்த அவர்கள் என் கால்களை வெறியோடு தாக்கினார்கள். எனது கால்கள் நொறுங்கி, எலும்புகள் முறிந்து அலறியபடியே நான் மயங்கி வீழ்ந்தேன்.

ஏதோ ஒரு திரவமும் வெள்ளை நிறப் பொடியும் கலந்து என் கால்களில் பூசி கட்டுப் போட்டனர். அடுத்த நாள் கட்டை அவிழ்த்து மீண்டும் அதே மருந்தைப் பூசி கட்டுப் போட்டனர். பல நாட்களுக்கு எனக்குக் குடிக்கக் கூட தண்ணீர் கொடுக்கவில்லை. சில நாட்கள் கழித்து கட்டு அவிழ்க்கப்பட்ட போது, கால்களின் மேல் தோல் உரிந்து வர ஆரம்பித்தது. அவர்கள் கிடுக்கியால் பிடித்து இழுத்து மேற்தோலை அகற்றினர். எனது கால்களிலிருந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

15 நாட்களுக்குப் பிறகு ஒரு அதிகாரி வந்து என்னைப் பார்த்தார். இந்த விவகாரம் தனது கவனத்துக்கு ஏன் கொண்டு வரப்படவில்லை என்று சிப்பாய்களிடம் கோபமாகக் கேட்டார். என்னை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுமாறு உத்திரவிட்டார். நான் துர்க்முல்லா ராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அங்கே இது போன்ற காயங்களுக்குச் சிகிச்சை அளிக்க வசதியில்லை என்று மருத்துவர்கள் திருப்பி அனுப்பி விட்டனர்.

பின்னர் நவம்பர் 20-ம் நாளன்று பாதமிபாக் ராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். இப்போது எனது கால்களின் எலும்புகள் வெளியே தெரியுமளவுக்கு மோசமாகி இருந்தது. மேற்தோல் உரிந்து கொண்டே வந்து அழுகி நாறியது. அம்மருத்துவமனையில் நவம்பர் 22-ம் நாளன்று எனது கால்களை மருத்துவர்கள் அகற்றி அறுவை சிகிச்சை செய்தனர்.

1991-ம் ஆண்டு நவம்பர் 4-ம் தேதி எனது கால்களுடன் நான் இராணுவத்தால் கைது செய்யப்பட்டேன். 1992 செப்டம்பர் 16-ந் தேதி நான் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டேன். ஆனால் இப்போது எனக்குக் கால்கள் இல்லை.

*(சிறீநகரிலுள்ள காஷ்மீர் கல்விக் கழகம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து)*

நன்றி: ''பிராண்டியர்'' - ஆங்கில வார இதழ், டிசம்பர் 17, 1994.

www.padippakam.com



## கொலையை மறைத்து கொள்ளி வைக்கும் போலீசார்

தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர்களைச் சுட்டுக் கொன்று விட்டு, யாரும் உரிமை கோரவில்லை என்று கூறி நூற்றுக்கணக்கான சடலங்களை பஞ்சாப் போலீசார் அண்மையில் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். பஞ்சாபில் பயங்கரவாதம் தலைவிரித்தாடியபோது, 1991-லிருந்து '93 வரை 426 சடலங்களை யாரும் உரிமை கோரவில்லை என்று போலீசார் தீயிட்டனர். இப்போது பெயரளவிலான சட்டபூர்வ ஆட்சி வந்த பிறகும்கூட கடந்த மாதத்தில் அமிர்தசரஸ் மாவட்டத்தில் மட்டும் 27 சடலங்களை இவ்வாறு கொளுத்தியுள்ளனர். உண்மையில், சுட்டுக் கொல்லப்பட்ட பெரும்பாலானவர்களின் உறவினர்களுக்குத் தெரிவிக்காமலேயே இந்த அட்டூழியம் நடந்துள்ளது.

பல இளைஞர்களின் பெற்றோர்கள் தமது மகன் உயிரோடு திரும்பி வருவான் என்று இன்னமும் ஏக்கமுடன் காத்திருக்கின்றனர். ஒரு சிலர் கைது செய்யப்பட்ட தமது மகனை உயிருடன் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்துமாறு ''ஹேமியஸ் கார்பஸ்'' மனுச் செய்துள்ளனர். பெரும்பாலோர், இப்படிச் செய்தால் போலீசார் மீண்டும் சித்திரவதை செய்வார்கள் என்று அஞ்சி கோர்ட்டுகளுக்குப் போகவில்லை.

கைது செய்யப்பட்டோ, காணாமலோ போன பல சீக்கிய இளைஞர்கள் போலீசாரால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டுள்ளனர்; அல்லது இந்த வதைகளுக்குச் சாட்சியாக இருந்ததற்காக போலீசாரால் தீர்த்துக் கட்டப்பட்டவர்கள். இக்கொலைகளை மூடி மறைக்க சடலங்களை நீண்டகாலமாகப் பதுக்கி வைத்திருந்த பஞ்சாப் போலீசார், எண்ணிக்கை பெருகிப் போனதால் அவற்றை எரித்துத் தடயங்களை அழித்து வருகின்றனர். மனித உரிமை அமைப்பினர் இந்த அட்டூழியங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த போது, பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்தான் இப்படி வழக்குத் தொடுக்க உரிமையுண்டு என்று பயங்கரவாதப் போலீசாருக்கு ஆதரவாக, நீதிமன்றம் வழக்குகளைத் தள்ளுபடி செய்துவிட்டது. இருப்பினும் மனித உரிமை அமைப்பினர் அமிர்தசரஸ், தரண் தரண் மாவட்டங்களில் போலீசார் இவ்வாறு பல நூறு சடலங்களை எரித்துள்ளதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி வருகின்றனர்.

**மருத்துவ மனையில் துப்பாக்கிச் சூடு நடத்திய ராணுவத்தை எதிர்த்து மகளிர் அமைப்பினர் நடத்தும் கண்டன ஊர்வலம்**



## மணிப்பூர் - நாகலாந்து துணை ராணுவத்தின் அட்டூழியம்

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மத்திய ரிசர்வ் போலீசுப் படை (CRPF) கடந்த ஜனவரி 7-ம் தேதியன்று நடத்தியுள்ள அட்டூழியங்களைக் கண்டு நாடே அதிர்ச்சியடைந்துள்ளது. தலைநகர் இம்பாலிலுள்ள அரசு பொதுமருத்துவமனை அருகே குழுமியிருந்த இத்துணை ராணுவப் படையினர் மீது, போராளிகள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பியோடினர். இதனால் ஆத்திரமடைந்த படையினர், மருத்துவமனைக்குள் புகுந்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். சிகிச்சைக்காக வந்த கூலித் தொழிலாளர்கள், ரிக்ஷா தொழிலாளர்கள், கடை நிலை ஊழியர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர் என அப்பாவி பொது மக்கள் 12 பேர் இந்த வெறியாட்டத்தில் பலியாகினர். இது தவிர 40-க்கும் மேற்பட்ட மக்கள் குண்டுக்காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். தமது காட்டுமிராண்டித்தனம் உடனடியாக நாட்டு மக்களுக்குத் தெரியாமலிருக்க தலைநகரின் தொலைபேசி இணைப்புகளை அறுத்தெறிந்து விட்டு, துணை ராணுவப் படைகள் ஊரடங்கு உத்திரவைப் பிறப்பித்தன.

இக்கொடுஞ் செயலை எதிர்த்து மணிப்பூர் மாநிலமே கொதித்தெழுந்தது. மாணவர்கள், மருத்துவர்கள், அரசு ஊழியர்கள், உழைக்கும் மக்கள் என பல்லாயிரக்கணக்கான மக்களும் மனித உரிமை அமைப்பினரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளதோடு, துணை ராணுவப் படைகளை மாநிலத்திலிருந்து வெளியேற்றக் கோரியும், பயங்கரவாத ''தடா'' சட்டத்தை ரத்து செய்யக் கோரியும் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

துணை ராணுவப் படைகளின் அட்டூழியம் மணிப்பூர் மாநிலத்தோடு நின்றுவிடவில்லை. வடகிழக்கு மாநிலங்கள் முழுவதுமே அறிவிக்கப்படாத ராணுவ ஆட்சியும், அட்டூழியங்களுமே நடக்கின்றன. கடந்த டிசம்பர் 27-ம் தேதியன்று நாகாலாந்தின் மோகோக்சங் மாவட்டத்தில் நாகா போராளிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிக்குப்பழி வாங்கும் வெறியோடு அசாம் மற்றும் மராத்தா துப்பாக்கிப் படையினர், பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 8 பேரைக் கொன்றொழித்தனர். அரசு வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். 47 வீடுகளைச் சூறையாடி தரைமட்டமாக்கினர். கடைகளை அடித்து நொறுக்கிக் கொள்ளையடித்தனர். பட்டப்பகலில் நடுவீதியில் பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவினர்.

வடகிழக்கு மாநிலங்களில் தொடரும் ராணுவ அட்டூழியங்களை ஆளும் வர்க்கப் பத்திரிகைகள் அறிந்தே இருட்டடிப்பு செய்து வருகின்றன. எந்தவொரு ஓட்டுக் கட்சியும் இத்தகைய அக்கிரமங்களுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராட முன்வரவில்லை. இவற்றை அனுபவரீதியாக உணர்ந்துள்ள வடகிழக்கிந்திய மக்கள், புரட்சிகர அமைப்புகளில் திரண்டு போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

## வி.இ.ப. மீது தடை மீண்டும் நூல் வேலி

கடந்த ஜனவரி 14-ம் தேதியிலிருந்து இந்து வெறி பாசிச அமைப்பான விசுவ இந்து பரிஷத் மீது மத்திய



படிப்பகம்

www.padippakam.com



அரசு மீண்டும் தடையை நீட்டித்துள்ளது. ஈராண்டுகளுக்கு முன்பு இந்த அமைப்பின் மீது விதிக்கப்பட்ட தடை 1994 டிசம்பர் 10-ம் தேதியோடு முடிவடைந்தது. அதே சமயம் உள்துறை அமைச்சகம் ஒருபுறம், தடை மீண்டும் நீட்டிக்கப்பட மாட்டாது என்றும், மறுபுறம் விசுவ இந்து பரிஷத்தின் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்றும் மழுப்பலாகப் பேசி வந்தது. இந்து வெறி சக்திகளின் அலை ஓங்கினால், தடையை ரத்துசெய்து தங்களை இந்துவெறியர்களின் கூட்டாளிகளாகக் காட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கலாம்; இந்துவெறி சக்திகள் பலவீனமாக இருந்தால், தடையை நீட்டித்து மதச்சார்பற்றவர்களாக மார்தட்டிக் கொண்டு சிறுபான்மை முஸ்லீம்களிடம் ஆதரவைப் பெறலாம் என்ற நரித்தனத்தோடு முடிவெடுப்பதில் காலங்கடத்தியது ராவ் அரசு. விசுவ இந்து பரிஷத் நடத்திய கூட்டங்களில், அயோத்தியைப் போலவே காசியையும் மதுராவையும் கைப்பற்றுவோம் என்று பேசியதைக் காட்டி, அதன் தன்மை மாறிவிடவில்லை என்று காரணங்காட்டி இப்போது மீண்டும் தடையை நீட்டித்துள்ளது.

இந்து வெறியர்களின் கூட்டாளிகளாக காங்கிரசு; இப்போது மீண்டும் தடையை நீட்டித்துள்ளதற்கு காரணமில்லாமல் இல்லை. குறிப்பாக, மதவாத சக்திகளுக்கு ஆதவளிக்கும் வகையில் காங்கிரசு செயல்படுவதாக குற்றம் சாட்டி வரும் அர்ஜுன்சிங் கோஷ்டியை வாயடைக்கவும், நடைபெறவுள்ள 4 மாநிலத் தேர்தல்களில் சிறுபான்மை முஸ்லீம்களிடம் இழந்த ஆதரவை மீண்டும் பெறுவதற்காகவும்தான் ராவ் அரசு இத்தடையை நீட்டித்து நாடகமாடுகிறது.

கடந்த ஈராண்டுகளாக விசுவ இந்து பரிஷத் தடை செய்யப்பட்ட அமைப்பு போல ஒருபோதும் செயல்பட்டதில்லை. ராவ் அரசும் இந்த அமைப்பின் மீது அடக்குமுறையையோ கெடுபிடியையோ ஏவியதுமில்லை. ஏட்டளவில் தடை நீடித்ததே தவிர, அதன் பாசிச நடவடிக்கைகள் முன்னைப் போலவே தொடர்ந்து நீடித்தது. தனது அலுவலகங்களில் வெளிப்படையாகவே அது செயல்பட்டது. அதன் தலைவர்களான அசோக் சிங்கால், கிரிராஜ் கிஷோர், ஆபாசப் பேச்சாளரான சாத்வி ரிதம்பரா ஆகியோர் வெளிப்படையாகவே பத்திரிகை கூட்டங்களை நடத்தினர். டெல்லியிலும், அரித்துவாரிலும் தடைவிதிகளை மீறி இப்பாசிச அமைப்பு, சாமியார் சந்நியாசிகளின் மாநாடுகளை நடத்தியது. ஆனாலும் ராவ் அரசு அதன் மீது கை வைக்கவேயில்லை.

இந்த லட்சணத்தில் இன்னும் எத்தனை ஆண்டுகள் தடையை நீட்டித்தாலும் அதனால் இந்து வெறி பாசிஸ்டுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. நாட்டு மக்களும் ராவ் அரசின் மாய்மாலங்களைக் கண்டு இனி ஏமாறப் போவதுமில்லை.

**காகிதச் சட்டத்தால் தடைநீட்டிப்பு; அயோத்தி வழியில் காசியையும் மதுராவையும் கைப்பற்ற கொக்கரிக்கும் வி.இ.ப. தலைவர்கள்**

## சிறீதரன் எம்.பி. விவகாரம்
## கிரிமினல்களுக்கு அரசியல் புகலிடம்

தமிழக எம்.பி., சிறீதரன் (அ.தி.மு.க) கணிப்பொறி உதிரிபாகங்கள் கடத்தலில் கைதாகியதுமே அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றும் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டார் ஜெயலலிதா. தலைக்கு ஆபத்து வராமல் தலைப்பாகையை மட்டும் விட்டுக் கொடுக்கிற தந்திரம்தான் இது என எல்லோருக்கும் தெரிந்தது. ஜெயா - சசிகலா கும்பலுக்கு மிகவும் விசுவாசமான - நெருக்கமான நபராக இருந்தவர்தான் சிறீதரன். தாமாக முன்வந்து இவருக்கு தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட கட்சியில் முதலாவதாக இடம் கொடுத்தார், ஜெயா. சிறீதரன் கையுங்களவுமாகப் பிடிபட்டுக் கொண்டதால் பின்வரும் ஆபத்தை உணர்ந்து கைகழுவி விட்டார்கள், கூட்டுப் பங்குதாரர்கள்.

ஜெயலலிதா காப்பாற்றுவார் என்று நம்பி ஏமாந்த சிறீதரன், "சகுனி" சுப்ரமணியசாமியின் உதவியை நாடி பிணையில் வெளிவந்தார். தான் பலிகடா என்றும் சூத்திரதாரிகள் வேறு சிலர் அல்லது "சக்தி" என்றும் குறிப்பிட்டு புலம்புகிறார். நேரிடையாக பெயரைக் குறிப்பிடாமல் இருப்பதற்கு ஒருவேளை கை-காலையோ, உயிரையோ எடுத்துவிடுவார்கள் என்ற பயம் காரணமாக இருக்கலாம். அல்லது இப்படி



'பூச்சாண்டி' காட்டிக் கொண்டிருந்தால் மீண்டும் அழைப்பு வரலாம்; போய் ஒட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை காரணமாக இருக்கலாம். சிறீதரன் விவகாரத்தை வைத்து சு. சாமியாலும் பெரிய அளவிற்கு பரபரப்பாக்க முடியவில்லை. மத்திய அரசோ ஜெயாவை சற்றே பயமுறுத்தி - எச்சரிக்கிற அளவிற்கு மட்டும் நடவடிக்கை எடுத்து நிறுத்திக் கொண்டது. ஏனெனில் ஜெயா, ராவ் கும்பல் சுயநலனடிப்படையில் பல்வேறு விசயங்களில் மோதலும் இணக்கமும் கலந்த உறவையே தொடர்ந்து கடைபிடிக்கின்றன.

சந்தேகப்பட்டு அப்பாவிகள் மீதெல்லாம் ஏவப்படும் "தடா" சட்டம், இக்கடத்தல் குற்றவாளிகள் மீது ஏவப்படவில்லை. ஹமீம், ரவிச்சந்திரன் ஆகிய கூலிக்கமர்த்தப்பட்ட கடத்தல் பேர்வழிகளைத் தவிர முக்கிய புள்ளிகளான சிறீதரன் எம்.பியும், மற்றவர்களும் பிணையில் வெளிவந்து தப்பித்துக் கொண்டார்கள். சசிகலா - நடராஜன் கும்பல், ஜெயாவின் பினாமி என்று கூறப்படுகிற ராஜரத்தினம் என்ற தொழிலதிபர், அ.தி.மு.க.மற்றும் காங்கிரசு எம்.பி.க்கள் சிலரது பெயர் இக்கடத்தல் விவகாரத்தில் அடிபட்டும் கூட சுங்கத்துறை விசாரணை கிடப்பில் போடப்படுகிறது. எடுத்ததெற்கெல்லாம் சி.பி.ஐ. விசாரணை தேவை என்று ஓலமிடும் ஓட்டுக்கட்சித் தலைவர்கள் வாய்மூடிதான் இருந்தார்கள். கிரிமினல் குற்றமிழைத்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்யும் அதிகாரமிருந்தும் தற்காலிக நீக்கம் கூட சபாநாயகர் செய்யவில்லை. நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சிறீதரன் எம்.பி.க்கு எதிராக எந்த கட்சி எம்.பி.யும் குரல் கொடுக்கவும் இல்லை.

லஞ்சம் - ஊழலைப் போல கடத்தல், விபச்சாரம் போன்ற சட்டவிரோதத் தொழில்களும் ஓட்டுக்கட்சி

www.padippakam.com



அரசியல்வாதிகள் மத்தியில் சர்வ சாதாரணமாகிவிட்டன. அனைத்து ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளும் கிரிமினல்களுடன் மறைமுகமாக தொடர்பு கொண்டிருக்கிறார்கள். உள்ளூர் அளவிலிருந்து சர்வதேச மாஃபியா கும்பல்வரை அரசியல்வாதிகள் கூட்டுவைத்துக் கொள்வதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக கிரிமினல்களே அரசியல்வாதிகளாக இருப்பது அல்லது அரசியல்வாதிகள் கிரிமினல்களாக மாறுவது அதிகரித்து வருகிறது. வெளியிலிருக்கும் மாஃபியா கிரிமினல் கும்பல் தலைவர்கள் அரசு, அரசியல் விவகாரங்களில் தலையிட்டு கட்டுப்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படி சகலமும் கிரிமினல் மயமாகி வருவதன் விளைவு ஒரு பாசிச ஆட்சியிலேயே போய் முடியும்.

## கோவா மக்களின் முன்னுதாரணமிக்க போராட்டம்

கோவா மாநிலத்தில், அமெரிக்காவின் ரசாயனக் கம்பெனியான டூ-பாண்ட் நிறுவனமும் இந்தியாவின் தரகுப் பெருமுதலாளியான தாபர் நிறுவனமும் கூட்டுச் சேர்ந்து நைலான் இழை ஆலை போன்டா வட்டாரத்திலுள்ள கேரிம் கிராமத்தில் 123 ஹெக்டேர் பரப்பளவில் 600 கோடி ரூபாய் மூலதனத்துடன் நிறுவப்பட உள்ளது. இந்த ஆலையினால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும்; ஆலையிலிருந்து வெளியேறும் கந்தகக் கழிவுகளால் இப்பகுதிவாழ் மக்களின் நுரையீரலும் தோலும் பாதிக்கப்படும்.

ஏற்கனவே, இந்த ஆலை நிறுவுவதை எதிர்த்துப் போராடி வந்த கோவா மக்கள், 9 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆலை நிறுவ ஒப்புதல் அளித்துள்ள அரசின் முடிவை அறிந்ததும் வெகுண்டெழுந்தார்கள். குறிப்பாக, நைலான் ஆலை எதிர்ப்புக் கமிட்டியின் ஒருங்கிணைப்பாளரான தத்தராம் தேசாயை போலீசார் கைது செய்து நிர்வாணமாக்கி சித்திரவதை செய்ததைத் தொடர்ந்து அவர்களது போராட்டம் தீவிரமடைந்தது. கடந்த ஜனவரி 23-ம் தேதியன்று ஆலை கட்டுமான அதிகாரிகளைச் சூழ்ந்துக் கொண்டு ''கெரோ'' செய்து விரட்டியடித்த இம்மக்கள், ஆலை நிலத்தில் கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவரையும், ''புல்டோசரை''யும் அடித்து நொறுக்கினர். செய்தியறிந்து ஓடோடி வந்த போலீசார் போராடும் மக்கள் மீது தடியடி நடத்தியும் கண்ணீர் புகை வீசியும் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டதோடு, கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் நாயக் என்ற இளைஞர் மாண்டுபோனார்; பலர் படுகாயமடைந்தனர்.



கோவா மக்களின் போர்க்கோலம்: துப்பாக்கிச் சூடு நடத்திய போலீசாரின் ''ஜீப்''களை எரித்து பதிலடி

இக்கொடுஞ்செயலை எதிர்த்து கடையடைப்பு, சாலை மறியல் போராட்டத்தில் இறங்கிய மக்கள், போலீசாரைத் திருப்பித் தாக்கி விரட்டியடித்து, போலீசு ''ஜீப்''களையும் தீயிட்டுக் கொளுத்தினர். ஆலை அலுவலகத்திலிருந்து கணிப்பொறிகளையும் கோப்புகளையும், பணப் பெட்டியையும் உடைத்து நொறுக்கித் தீயிட்டனர். சமரசம் பேச வந்த அரசு அதிகாரிகளை நையப்புடைத்து அரசு வாகனங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர். துப்பாக்கிச் சூட்டில் மாண்டுபோன இளைஞர் நாயக்கின் இறுதி ஊர்வலத்தில் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று, ஆலை நிலத்திலேயே அத்தியாகிக்கு நினைவுத்தூண் எழுப்பி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

## ஏழ்மையைப் பயன்படுத்தி கிட்னி கடத்தும் கும்பல்

சிறுநீரகங்களைத் திருடி கள்ளத்தனமாக அவற்றை வெளிநாட்டினருக்கு விற்றுவந்த மோசடிக் கும்பலொன்றை, பாதிப்படைந்த வேலு என்பவர் கொடுத்த புகாரையடுத்து பெங்களூர் நகரில் அம்மாநில போலீசார் கைது செய்தனர். கைதானவர்களுள் சையத் அடில் மற்றும் சித்தராஜூ இருவரும் மருத்துவர்கள்; இம்மோசடியின் சூத்திரதாரிகள். யூசுப் மற்றும் ஹனீப் என்ற இருவரும் ஆட்களைப் பிடித்துச் செல்லும் தரகர்களாகச் செயல்பட்டு உள்ளனர்.

சிறுநீரகத்தை இழந்து ஏமாந்து போனவர்களுள் ஈரோடு மற்றும் சேலம் பகுதிகளைச் சேர்ந்த வறிய விசைத்தறி தொழிலாளர்கள் கணிசமானோர். இவர்களது பொருளாதார நெருக்கடியினையும் அறியாமையையும் இம்மோசடிக் கும்பல் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது; இத் தொழிலாளர்களுள் ஆண்கள் - பெண்கள் என கிட்டத்தட்ட 5000 பேர் தற்பொழுது ஒரு சிறுநீரகத்துடன் தான் உயிர் வாழ்கின்றனர். 5000-ல் இருந்து முப்பதாயிரம் ரூபாய் வரை இவர்களுக்குக் கொடுத்துவிட்டு, சிறுநீரகங்கள் ஒவ்வொன்றையும் ஐந்து லட்சம் ரூபாய் வரை வெளிநாட்டினருக்கு விற்றுள்ளது இம்மோசடிக் கும்பல்.

இந்த அவலம் குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னேயே பத்திரிகைகளில் விரிவாக செய்திகள் வெளிவந்தன. தமிழ்நாட்டில் ஈரோடு, சேலம் தவிர சென்னையிலுள்ள வில்லிவாக்கம் என்ற பகுதி ''கிட்னிவாக்கம்'' என அழைக்கப் படுமளவு சிறுநீரக விற்பனையில் முதன்மையாக உள்ளது. இந்நிலையிலும் ஜெயா அரசு ஒரு முழுமையான விசாரணை நடத்துவதற்குக் கூடத் தயாராக இல்லை. மைய ராவ் அரசோ நாடாளுமன்றத்தில் மனித பாகங்கள் விற்கப்படுவதைத் தடை செய்யும் சட்டத்தை உடனே கொண்டு வந்ததைப் பெருமையாக பீற்றிக் கொள்கிறது.

ஆனால் இச்சட்டம் ஏற்கனவே அமுலில் இருக்கும் பம்பாயில் மற்றொரு சிறுநீரகத் திருட்டுக் கும்பல் தற்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருப்பது ராவின் முகத்தில் கரி பூசுவதாக அமைந்தது. இது தவிர இந்தியாவில் இருந்து இருதயம், கண்கள் போன்ற மனித உறுப்புகள் சர்வதேச சந்தையில் மலிவான விலையில் விற்கப்பட்டு வருவதை பத்திரிகைகள் அம்பலப்படுத்தியுள்ளன. 47 ஆண்டு காலமாக 'சோசலிசம்' கோலோச்சிய பொழுதே மக்கள் இதுதான் கண்ட பலனென்றால், தாராளமயமாக்கம் இனி அவர்கள் கூட்டைக் கூட விட்டு வைக்காது!

படிப்பகம்

www.padippakam.com

6-ம் பக்கத் தொடர்ச்சி...

றார். ''தனிவிமானத்தில் போகுமளவுக்கு ஏது இவ்வளவு பணம்?'' என்று நிருபர்கள் கேட்டதற்கு, இவ்வளவு வருடம் வேலை செய்த அதிகாரி இதைக் கூடவா சேமித்திருக்க முடியாது என்று பச்சையாகப் புளுகினார். அப்படியே இருந்தாலும் ஒரு பயணத்திற்கு இவ்வளவு தொகை செலவழிக்கும் வசதி வந்துவிடுமா?

ஒருமுறை டெல்லியைவிட்டு வெளியே போனால் 7 லட்சம் ரூபாய் அரசுப் பணத்தை விரயம் செய்கிறார், சேஷன். சேஷனுக்கு விமான நிலையத்தில் அதிமுக கருப்புக் கொடி காட்டிய போது இங்கு அவர் வந்ததே அவரது உறவினர் வீட்டுத் திருமணத்துக்குத்தான். அதையே அதிகாரபூர்வ, பணிப்ப பணம் என்று காட்டி கணக்கில் எய்த்திருக்கிறார். இராணுவத்துறை செயலாளராக பதவி ஏற்றதும் ஏற்கனவே ஆடம்பரமாக இருந்த மாளிகைக்கு 1.7 லட்சம் ரூபாய் செலவிட்டு மேலும் வசதிகளைச் சேர்த்துக் கொண்டார். இப்படி சேஷனின் லஞ்ச ஊழல் அதிகாரமுறை கேடுகள் என்ற சேட்டைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இப்போது நேர்மையான, தூய்மையான, ஜனநாயகப் போராளியாகக் கபட நாடகமாடும் சேஷன் உண்மையில் ஒரு பார்ப்பன-பாசிஸ்டுதான். சங்கரமடத்தில் ''குறிகேட்டு''த் தேர்தல் தேதி குறிப்பது, அங்கே பூணூலும் தொப்பையுமாக கம்புசுற்றி பார்ப்பனக் கும்பலை முறைப்படுத்துவது, காங்கிரசுக்குள் உள்ள பார்ப்பன கும்பலுக்கும், பா.ஜ.க.-வுக்கும், பாசிச ஜெயாவுக்கும் சாதகமாகவே செயல்படுவது எல்லாமே இதன் காரணமாகத்தான்.

ராஜீவ் சாவைத் தொடர்ந்து அனுதாப அலையை அறுவடை செய்து கொள்ளக் காங்கிரசுக்கு உதவியது முதல் பஞ்சாப் மற்றும் பிற தேர்தல்களை அதற்கு வசதியாக நடத்தியது, தேர்தல் கட்டுத்திட்டங்களை எப்போதும் பிற எதிர்க்கட்சி ஆளும் அரசுகள்தாம் மீறுவதாகக் காட்டுவது - மிரட்டுவது வரை பல வழிகளிலும் காங்கிரசுக்குச் சாதகமாகவே சேஷனின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அதனுடன் சேஷனுக்குள்ள மோதல் முரண்பாடு ஒரு நிழல் சண்டையும் ஊடலும் தான். சேஷனுக்கு எதிராகக் காங்கிரசு கொண்டுவந்த சட்டத் திருத்தங்களும், மத்திய மந்திரிகளைப் பதவி இழக்கச் செய்யும் நடவடிக்கை என்ற பூச்சாண்டி காட்டிவிட்டு சேஷன் கைவிட்டதும் இதையே காட்டுகின்றன.

பா.ஜ.க தேர்தல் சின்னம் பொறித்துக் கொண்டு அயோத்தி உட்பட அவர்கள் ரதயாத்திரை போகிறார்கள். தேர்தல் மேடைகளில் சிவசேனாவும் பா.ஜ.கவும் பகிரங்கமாக மதவெறிப் பிரச்சாரம் செய்கிறார்கள். இவை தேர்தல் நெறிமுறைகளுக்கு முரணானவை என்று சேஷனுக்குத் தெரியாதா? தெரிந்தும் கண்டு கொள்வதில்லை. திடீரென்று பம்பாயிலும், அசாமிலும் வாழும் இசுலாமியர் ''இந்தியர்தாம்!'' என்ற குடியுரிமையை நிரூபிக்கவேண்டும்; இல்லையானால் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவர் என்ற நடவடிக்கைக்குக் காரணம் சேஷன். இசுலாமியப் பெண்கள் வாக்களிக்கும் உரிமை பெறும் அடையாள அட்டைக்காக அவர்களது மதமரபுக்கு மாறாக புகைப்படம் எடுக்கும்படி செய்தார். இவை பா.ஜ.க.-வுக்குக் கொண்டாட்டமாகி விட்டன. இங்கே இடைத் தேர்தல்களின்போது லஞ்சம் - கள்ள ஓட்டு, அராஜக வெறியாட்டம்போடும் ஜெயலலிதா கும்பலுக்கு எதிராக ஆதாரங்கள் எவ்வளவு இருந்தாலும் சேஷன் அவற்றைக் கண்டு கொள்வதில்லை.

பாசிசம் என்பது அதிகார வெறிபிடித்த ஒரு சிறுகும்பலின் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. அது எவ்வளவு சிறுகும்பலாக இருந்தாலும் ஒருவரை ஒருவர் வீழ்த்தி அதிகாரத்தைப் பிடிக்கும் தனிநபர் அதிகார வெறி தவிர்க்கமுடியாது. அத்தகைய கும்பலில் சேஷன் போன்ற தனிநபர் பேராசையால் முரண்பாடுகள் எழுவது உண்டு. இதையும் பயன்படுத்திக் கொண்டு எல்லாப் பிரிவுக்கும் மேலான நடுநிலையான தூய்மையான, துணிச்சலான, ஜனநாயகவாதியாக நடிக்கிறவர்தான் சேஷன்.

● ஆர்.கே.

# தி.க. தலைமையிடம் எஞ்சியிருப்பது ரௌடித்தனமே

கடந்த 19.2.95 அன்று மண்டல திராவிடர் மாணவர் எழுச்சி மாநாடு ஒன்றைத் திராவிடர் கழகம் திருச்சி - புத்தூரில் நடத்தியது. வீரமணி நடத்திவரும் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர், மாணவிகள் மற்றும் தி.க.வினர் இம்மாநாட்டில் பங்கேற்றனர். பார்ப்பன எதிர்ப்பு, மாணவர்கள் நலன், இடஒதுக்கீடு மூலம் சமூகநீதி, மாணவர்களைக் கெடுக்கும் பத்திரிகைகள், சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை எதிர்ப்பது போன்ற விழிப்புணர்வுச் செயல்பாடுகளுக்கு தி.க.வை விட்டால் வேறு அமைப்பே தமிழகத்தில் இல்லை என்றும், வீரமணி மட்டும் இல்லையென்றால் பார்ப்பனரல்லாத எவருக்கும் படிப்போ, வேலையோ, நாதியோ இல்லையென்றும் இம்மாநாட்டில் பங்கேற்றவர்கள் பேசித் தீர்த்தார்கள். ஆனால் மேற்கூறிய எந்த பிரச்னைக்காகவும், முன்முயற்சியுடன் போராடாதது மட்டுமல்ல; பார்ப்பன செயாவின் ஆட்சிக்கு வால் பிடித்து எல்லா வகை சீரழிவுகளுடன் கைகோர்த்து, தமிழக மாணவர்களுக்கும், மக்களுக்கும் துரோகமிழைத்து வருவதே இன்றைய வீரமணி தலைமையிலான தி.க.வின் எதார்த்தமாகும். இதைத் தகுந்த ஆதாரத்துடன் துண்டு பிரசுரம் மூலமும், சுவரொட்டிகள் மூலமும், மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகளின் திருச்சி கிளைகள் இம்மாநாட்டையொட்டி இயக்கமெடுத்தன. தனது சுயரூபம் அம்பலப்படுவதை கண்டு பீதியடைந்த வீரமணி கும்பல் தனது எடுபிடிகளை ஏவி நூற்றுக்கணக்கான ம.க.இ.க., பு.மா.இ.மு., சுவரொட்டிகளைக் கிழித்து அகற்றியது.

மாநாட்டுக்குச் சென்ற தி.க. அணிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் துண்டு பிரசுரம் விநியோகித்த ம.க.இ.க., பு.மா.இ.மு., தோழர்களைத் தாக்கியதோடு பிரசுரங்களையும் பிடுங்கிச் சென்றது. காலையில் பிரசுரம் விநியோகித்த தோழர்கள். கிறிஷ்டி, சூரியமதி ஆகியோரையும், மாலையில் பிரசுரம் விநியோகித்த தோழர்கள். சேகர், ரமேஷ் ஆகியோரையும் வீரமணி ஏவிய ரௌடிக் கும்பல் கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியது. தோழர். சேகரை அடித்துத் தாக்கிய போது பொது மக்கள் கூடி, அவர் சாலையில் பிரசுரம் தருகிறார், அவர்கள் கருத்தைக் கூற அவர்களுக்கு உரிமையுண்டு; ஏன் அவரை அடிக்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பியதால் அம்பலப்பட்டுப் போன ரௌடிகள் தோழரை மாநாடு நடந்த பெரியார் மாளிகைக்குள் தூக்கிச் சென்று தாக்கினர். தனியொரு தோழரை இருபதுக்கும் மேற்பட்ட ரௌடிகள் மூர்க்கத்தனமாகத் தாக்கினர்.

தோழர். சேகர் மூர்ச்சையடைந்த நிலையில் போலீசு தலையிட்டு மீட்டது. தி.க.வின் திருச்சி நகரத்தலைவர் மகாலிங்கம் தி.க.வின் இளைஞரணி மாவட்டத் தலைவர் தமிழ் நெஞ்சன், செல்வம், ஜெயராஜன், பொன்னி ஆகியோர் உள்ளிட்ட எடுபிடிகள் இத்தாக்குதலை நடத்தினர். தோழர்கள் தந்துள்ள புகாரைப் பதிவு செய்துள்ள போலீசு மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்காததோடு வீரமணியின் எடுபிடிகளுக்கு இரவு பகலாக பாதுகாப்புத் தந்தது.

கொள்கையைக் கைவிட்டுவிட்ட வீரமணி கும்பல் நமது அரசியல்ரீதியான விமர்சனங்களை அரசியல்ரீதியில் எதிர்கொண்டு நேர்மையான முறையில் பதிலளிக்கும் என்று எதிர்பார்க்குமளவு புரட்சியாளர்கள் அப்பாவிகளல்ல; ஆனால் இன்றும் பாமரத்தனமாக வீரமணியையும் தி.க.வையும் நம்பிக் கொண்டிருக்கும் தமிழின உணர்வாளர்கள், ''இனியும் இத் துரோகக் கும்பலை விட்டு வைப்பதா?'' என இதன் பிறகாவது கிளர்ந்தெழாவிடில், அவர்களுக்கும் துரோகப் பட்டங்களைத் தரத் தமிழக மக்கள் தயங்க மாட்டார்கள்.


Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd, Madras - 600 024. Editor:R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No TN/MS(S) 622

# இதுதான் இன்றைய இந்தியா



அருகிலுள்ள படத்தைப் பாருங்கள்; புகைவண்டி செல்லும் இருப்புப் பாதையும் அதன் கீழ் அமைந்துள்ள பாலம் ஒன்றும் தெரியும். மத்திய ரெயில்வே துறை மந்திரி ஜாபர் ஷெரீப்பின் சொகுசிற்காக கட்டப்பட்டுள்ள சுரங்கப் பாலமிது. குறுக்கே ஓடும் ஆற்றைக் கடக்க பாலம் இன்றி இருக்கும் பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் இந்தியாவெங்கும் உண்டு; புத்தக மூட்டையையும் சோத்து சட்டியையும் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஆற்றில் இறங்கி கடக்கும்பொழுதே மூழ்கி செத்துப் போன குழந்தைகளின் கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்காது. 'சுதந்திரம்' அடைந்து நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஆன பின்னும் இந்த அவலம் மாறவில்லை. ஆனால் மந்திரி ஒருமுறை புகைவண்டி கடக்கும் வரை காத்திருந்தார் என்றவுடனேயே இனியும் அவர் மனம் நோகாமல் தனது பண்ணை வீட்டிற்குச் சென்று குடித்துக் கும்மாளமடிப்பதற்கு 90 லட்ச ரூபாய் செலவில் இச்சுரங்கப் பாலத்தைக் கட்டி தந்திருக்கிறது, இக்கேடு கெட்ட காங்கிரசு ஆட்சி.

இதோ போராடும் இப்பெண்கள் பீகாரின் பழங்குடி மக்கள். அரசாங்கத்திடமிருந்து கூடுதலாக சலுகை கேட்டு இவர்கள் போராடவில்லை; கைதூக்கி விட வேண்டிய அரசே, தங்களின் வாழ்க்கையைப் பறிக்கும் எமனாக மாறிப் போனதை எதிர்த்துதான் அவர்கள் போராடுகிறார்கள். குண்டாந்தடிகளையும் துப்பாக்கிகளையும் கொண்டு நாடெங்கும் ஏழு கோடி பூர்வகுடி மக்களின் சொந்த நிலங்களைப் பறித்தும் பிறந்த மண்ணில் இருந்து அவர்களை விரட்டியடித்தும் தான் 'வளர்ச்சி'ப் பணிகளை நடத்தி வருகிறார்கள் ஆட்சியாளர்கள். படிப்பறிவற்றவர்கள்தானே என்ற மமதை கொண்டு, வறண்ட - பாலை நிலங்களை நிவாரணமாகத் தந்து மோசடி செய்கிறார்கள். வஞ்சக எண்ணங் கொண்ட அரசால், இம்மண்ணின் சொந்தக்காரர்கள் இன்று சொந்த நாட்டிலேயே காலின் அடியில் மிதிபடும் ஒரு அடி நிலம் கூட சொந்தமின்றி அகதிகளாய் அலைகிறார்கள்.



தங்களின் சொகுசு வாழ்க்கையில் எந்தவித சிறு குறையும் இருக்கக் கூடாது என அதிகாரத்தைக் கொண்டு பொதுப் பணத்தைச் சூறையாடும் ஆட்சியாளர்கள் ஒருபுறம்; நாட்டின் வளர்ச்சி என்ற பெயரில் தங்களது அற்ப - சொற்ப உடைமையையும் சுகத்தையும் இழந்து வாடும் உழைக்கும் மக்கள் மறுபுறம். நமது வாழ்க்கையைப் பறித்தவர்களின் வாழ்க்கையை நாம் பறிக்கப் போவது எப்போது?

படிப்பகம்